பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பணத்தை விரைவாக பெற்றுக்கொள்ள நல்லூரில்...
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 10 (29.07.2004) வியாழக்கிழமை இதழ் :300

# அரசு – புலிகள் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க முடியும்

## ஹெல்கிசன் நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)



**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான முறுகல் நிலையில் சற்று முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாகவும் –**

**இரு தரப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கமுடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்**

**இலங்கைக்கான விஜயத்தை முடித்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தகவல் வெளியிடுகையில்–**

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கையே முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இதில் நோர்வே அனுசரணையையும், உதவிகளையும் மாத்திரமே வழங்கமுடியும்.

இரண்டு தரப்பினரும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே கடுமையாக உழைக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் மனந்திறந்த நிலையில் செயற்படவேண்டும்.

கருணாவின் விடயம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தடங்கலை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கில் நடைபெறும் பிரச்சினைகள் பூதாகரமானதாக மாறும் முன்னர் அவற்றை தீர்த்துக் கொள்வது அவசியமானதாகும் என விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

## இலங்கை அரசியல் நிலை குறித்து

## மன்மோகன் சிங்குடன் சந்திரிகா தாய்லாந்தில் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள உயர் மட்ட பிராந்திய மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் -

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை, தடைப்பட்டிருக்கும் சமாதானமுயற்சிகள் திருகோணமலை துறைமுகப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்புக் குறித்தும் விரிவாகப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற் போன்றோரும் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், வர்த்தக அமைச்சர் பெர்ணாண்டோ புள்ளே போன்றோரும் தாய்லாந்து பயணமாகியிருப்பதாக தெரியவருகிறது.

இது தவிர, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவையும் மாநாட்டின் முடிவில் தாய்லாந்து வரும்படி ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா மியன்மார், (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் சட்ட ஒழுங்கு நடைமுறை சீர்குலைந்துவிட்டது எனவும், உடனடியாக ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையிட வேண்டும் எனவும், ஐ.நா.மனித உரிமைகள் உப ஆணைக்குழு இரு பிரதான ஐ.நா சபையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களைக் கேட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவில் ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக்குழுவின் 56 ஆவது அமர்வு ஆரம்பமானது.

அனைத்துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களை உறுப்பினர்களாகவும், அனைத்து நாடுகளையும் ஐ.நா அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களையும் அவதானிகளாகவும் கொண்டு ஆரம்பமான இந்தக் கூட்டத்தொடரானது ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கொள்கை உருவாக்கல்

## அரசு - புலிகள் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் தாய்லாந்தில்!

## கொழும்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அடுத்தமாத முற்பகுதியில் தாய்லாந்தில் இடம்பெறலாம் என கொழும்புத்தகவல் ஒன்று தெரிவித்தது.

தற்போது தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது குறித்து ஆராய்ந்து

நாளை மறுதினம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். வெள்ளிக்கிழமை இடம்பெறும் இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வும், ஐ.நா.மனித உரிமைகள் உப ஆணைக்குழு இரு பிரதான ஐ.நா சபையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களைக் கேட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவில் ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக்குழுவின் 56 ஆவது அமர்வு ஆரம்பமானது.

அனைத்துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களை உறுப்பினர்களாகவும், அனைத்து நாடுகளையும் ஐ.நா அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களையும் அவதானிகளாகவும் கொண்டு ஆரம்பமான இந்தக் கூட்டத்தொடரானது ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கொள்கை உருவாக்கல் நெறிமுறைகளின் கீழ் செயற்படுகின்றது.

இவ் உப ஆணைக்குழு முன் - இலங்கைச் சட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

### காணாமற்போனோர் வழக்கில்

# ராஜபக்ஷவை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு!



(யாழ்ப்பாணம்)

1996/97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதாகி காணாமற்போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைக்கு, யாழ்.மேல்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட - மரணதண்டனைக் கைதி கோப்ரல் ராஜபக்ஷவை யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 1996/97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதாகி காணாமற்போனோர் தொடர்பான 14 ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரியாலையைச் சேர்ந்த லோகேஸ்வரன் சேரன், சுப்பிரமணியம் சுதாகரன், நாகமுத்து செல்வரத்தினம், புத்தூரைச் சேர்ந்த பூதத்தம்பி ஜதீஸ்குமார், செல்லத்துரை நந்தகுமாரன், கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பரமு சந்திரசேகரன், நாவற்குழியைச் சேர்ந்த சிவகுரு தங்கத்துரை, யாழ்.மத்தியூஸ் வீதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அடுத்தமாத முற்பகுதியில் தாய்லாந்தில் இடம்பெறலாம் என கொழும்புத்தகவல் ஒன்று தெரிவித்தது.

தற்போது தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது குறித்து ஆராய்ந்து வருவதாக தகவல் தெரிவித்தது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசத்தயாராக இருப்பதாக அறிவித்துள்ள நிலையில், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இந்தவார இறுதியில் வெளியிடப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாளை மறுதினம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார். வெள்ளிக்கிழமை இடம்பெறும் இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுக்களை ஆரம்பிக்கும் முகமாகவே, கருணாவை அரசாங்கம் நாட்டைவிட்டு வெளியேற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும்.(01)



# பிரதமர் ராஜபக்ஷவுடன் ஹெல்கிசன் சந்திப்பு!

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு விசும்பாயவில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது சமாதான நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

பிரதமரின் செயலாளர் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நோர்வே வெளிவிவகார அமைச்சர் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்து பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.



எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# பருத்தித்துறை கோட்ட பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் தொடர்ச்சி வருமாறு:

**வாசிப்பு - பிரிவு - I**

முதலாம் இடம் - சு.சுஜீபன் (மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - ப.துசிதா (புற்றளை ம.வி).

மூன்றாம் இடம் - பா.நிவேதினி (தம்பசிட்டி மெ.மி.த.பாடசாலை).

**பிரிவு - II**

முதலாம் இடம் - அ.அருள்நிலா (வட இந்து மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஜெ.சுகன்யா (வல்வை சிவகுரு வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - அ.கஜேந்தினி (தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயம்).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**கதை கூறல்**

**பிரிவு - I**

முதலாம் இடம் - கி.சிவதர்சன் (புற்றளை ம.வி).

இரண்டாம் இடம் - பி.ஜோதிகா (வல்வை சிவகுரு.வி).

மூன்றாம் இடம் - தே.கோகுலன் (கொற்றாவத்தை அ.மி.த.க).

**ஆக்கம் - எழுத்து**

**பிரிவு - II**

முதலாம் இடம் - வி.லக்ஷா (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பா).

இரண்டாம் இடம் - தி.சுஜித்ரா (தம்பசிட்டி மெ.மி.த.க.பா).

மூன்றாம் இடம் - தி.சுதாகரன் (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம்).

**கட்டுரை, கடிதம்**

**பிரிவு - II**

முதலாம் இடம் - கு.தர்சிகா (கொற்றாவத்தை அ.மி.த.பா).

இரண்டாம் இடம் - சி.சர்மிளா (வல்வை மகளிர் ம.வி).

மூன்றாம் இடம் - த.மைதிலி (மெதடிஸ்த பெண்கள் உ.பா).

**பிரிவு - III**

முதலாம் இடம் - ம.அஜந்தினி (தொண்டைமானாறு வீ.ம.வி).

இரண்டாம் இடம் - பு.சிவரூபன் (சிதம்பராக் கல்லூரி).

மூன்றாம் இடம் - பி.யாசினி (வட இந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - கே.வாகீசன் (ஹாட்லிக் கல்லூரி).

இரண்டாம் இடம் - ச.நேசராஜன் (வேலாயுதம் ம.வி).

மூன்றாம் இடம் - இ.மணிமொழி (சிதம்பராக் கல்லூரி).

**இலக்கணப் போட்டி**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - ஸ்ரீ. விஜிதா (தும்பளை சிவப்பிரகாச ம.வி.)

இரண்டாம் இடம் - ப.சுபேந்தினி (வட இந்து மகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம் - பி.ஜானகி (மெதடிஸ்த பெ.உ.பா).

**கவிதை ஆக்கம்**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - சி.உஷா (வலவை சிவகுரு வி.)

இரண்டாம் இடம் - தி. வானதி (புற்றளை ம.வி.)

மூன்றாம் இடம் - தே.ரவினா (தும்பளை சிவப்பிரகாச ம.வி.)

**சிறுகதை ஆக்கம்**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - ஆ. நதியா (பரு. சித்தி விநாயகர் வி.)

இரண்டாம் இடம் - மு.நிமல தாஸ் (வேலாயுதம் ம.வி.)

மூன்றாம் இடம் - வி.மேரிவினோ (சென். தோமஸ் றோ.க.பெ.பா.)

**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

**பிரிவு - V**

முதலாம் இடம் - நி. சுகுமார் (வேலாயுதம் ம.வி.)

இரண்டாம் இடம் - க.கலைமகள் (வல்வை மகளிர் ம.வி.)

**பாவோதல்**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - சி.ஜீவராணி (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - கி. அபிராமி (மெதடிஸ்த பெ.உ.பா)

மூன்றாம் இடம் - செ.ஜனார்த்தன் (சிதம்பராக் கல்லூரி)

**நடனம் - தனி**

**பிரிவு - I**

முதலாம் இடம் - மு.தர்சன் (தும்பளை சி.ம.வி.)

இரண்டாம் இடம் - ச.ஐஸ்வர்யா (துன்னாலை மேற்கு மெ.மி.க)

**பிரிவு - II**

முதலாம் இடம் - ப.கல்யாணி (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - பொ.இந்துஜா (மெதடிஸ்த பெ.உ.பா)

**பிரிவு - III**

முதலாம் இடம் - கி.கௌதமி (மெதடிஸ்த பெ.உ.பா)

இரண்டாம் இடம் - இ. நிரோசா (சென். தோமஸ் றோ.க.பெ)

மூன்றாம் இடம் - பா.தர்மினி (வட இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - IV**

முதலாம் இடம் - ஜோ.மொரின் டயானா (மெதடிஸ்த பெ.உ.பா)

இரண்டாம் இடம் - க. சிந்துஜா (வட இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - V**

முதலாம் இடம் - இ. கார்த்திகா (வட இந்து மகளிர் கல்லூரி)

**இலக்கணப் போட்டி**

**பிரிவு - V**

முதலாம் இடம் - இ.உமா (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - இ.கோகிலவாணி (மெதடிஸ்த பெ.உ.பா)

மூன்றாம் இடம் - இ.சத்தியபாமா (புற்றளை ம.வி.)

**திறனாய்வுப் போட்டி**

**பிரிவு - V**

முதலாம் இடம் - வி.மயூரதாஸ் (புற்றளை ம.வி.)

**குறு நாடக ஆக்கம்**

**பிரிவு - IV**

முதலாம் இடம் - சி.நிமலன் (ஹாட்லிக் கல்லூரி)

இரண்டாம் இடம் - ஆ.அ.ஜெபராசா (வேலாயுதம் ம.வி.)

**பிரிவு - V**

முதலாம் இடம் - கி. திலகேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி)

இரண்டாம் இடம் - த.பிரியதர்சினி (வல்வை மகளிர் ம.வி.)

மூன்றாம் இடம் - உ.அனுசா (தொண்டைமனாறு வீ.ம.வி)

**கவிதை ஆக்கம் - பிரிவு - IV**

முதலாம் இடம் - ச.புவானந்தன் (ஹாட்லிக் கல்லூரி)

இரண்டாம் இடம் - ம.அனல்தர்ஷன் (வேலாயுதம் ம.வி.)

மூன்றாம் இடம் - சு.குமரன் (சிதம்பராக் கல்லூரி)

**இசையும் அசைவும்**

**பிரிவு - I**

முதலாம் இடம் - கு.விதுசியா - (வல்வை சிவகுரு. வி)

இரண்டாம் இடம் - வி.அபிராமி (தும்பளை சிவப்பிரகாசம் வித்.)

**இசை தனி - பிரிவு - II**

முதலாம் இடம் - சி.தாட்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - ப.கௌசிகன் (ஹாட்லிக் கல்லூரி)

மூன்றாம் இடம் - சி.நிசாந்தன் (தும்பளை சிவப்பிரகாசம் வித்.)

**பிரிவு - III**

முதலாம் இடம் - ந.கோகிலவாணி (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - சி.சரண்ராஜ் (வல்வை சிவகுரு வித்.)

மூன்றாம் இடம் - செ.செல்வரஜீவன் (ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு - IV**

முதலாம் இடம் - சு.சுகிர்தா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை)

இரண்டாம் இடம் - கௌ.காயத்திரி (வட இந்து மகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம் - ச.யான்சி (சென். தோமஸ் றோ.க.த.க.பா)

**பிரிவு - V**

முதலாம் இடம் - செ.மயூரி (வட இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் - ஜெஸ்மின் விஜிகலா (மெதடிஸ்த பெ.உ.பா)

மூன்றாம் இடம் - சி. ராஜலக்ஸ்மி (வல்வை மகளிர் கல்லூரி) - பா.சிறீஸ்கலா (தொண்டைமனாறு வீ.ம.வி.)

**இசைக் குழு I**

முதலாம் இடம் - ஹாட்லிக் கல்லூரி

இரண்டாம் இடம் - வட இந்து மகளிர் கல்லூரி

மூன்றாம் இடம் - மெதடிஸ்த பெண்கள் உ. பாடசாலை.

(தொடரும்)



பின்னவெலவில் உள்ள தொழிற்சாலையில் காகிதம், பாய், அழகிய திரைச்சீலைகள், தடுப்பு வேலிகள், அட்டைப்பெட்டிகள் மற்றும் கலைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பொருட்களை யானையின் சாணத்தைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகிறது. யானைச் சாணத்தை கொண்டு பெண்கள் அழகிய புத்தக அட்டைகளை தயாரிக்கிறார்கள்.

## சுருக்கெழுத்துப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்டுவரும் பாடசாலை வலய மாணவர்களில் சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி ஏற்கனவே அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி அதிபரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுனர் தின பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பவள விழாவும், நிறுவுனர் தின விழாவும் நாளை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ச.சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், வட - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், தமிழீழ கல்விக் கழகத்தை சேர்ந்த அருண்மாஸ்டர், பொறியியலாளரான வி.ராஜன், வி.ஈஸ்வரகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்துகொள்வர்.

## மன்னார் சுதந்திர புரியில் 15 கிலோ அமுக்கவெடி மீட்பு

மன்னார் வங்காலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் 15 கிலோகிராம் நிறையுடைய அமுக்கவெடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு செயல் இழக்கவைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுதந்திரபுரியில், இந்திய சீக்கிய மிதிவெடி அகற்றும் நிறுவனம் வங்காலை நெல் கொள்வனவு சங்கக் கட்டடத்தில் தங்கி இருந்து மிதிவெடிகளை அகற்றி வருகின்றனர். இவர்கள் சுதந்திரபுரி என்னும் இடத்தில் மிதிவெடி அகற்றிவந்த சமயமே 15 கிலோகிராம் நிறையுள்ள அமுக்க வெடியினை கண்டுபிடித்து அதனை செயலிழக்கச் செய்துள்ளனர். (201)

## உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு

வலி.தெற்கு பிரதேச சபையினர் நடாத்தும் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள உடுவில் பிரதேச சபை உப அலுவலக திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பிரதேச சபை செயலாளர் திருமதி. ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த விழாவிற்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (101)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறும்.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

COMMERCE STUDENTS' UNION · UNIVERSITY OF JAFFNA

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

**காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை**
**நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**
**இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.**

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

## சிறுவிளம்பரம்

**விற்பனைக்குண்டு**

சன்னதி றோட், அச்சுவேலி விளங்கியவத்தையில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை), தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : பிறேமா-ஜெகதீசர், 173, அரசடி றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.No : 0712-327972
(794)









பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பாங்கொங் பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா பங்கேற்பார்

(கொழும்பு)

ஆசிய நாடுகள் பலவற்றை ஒன்றிணைப்பதற்கான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பொருளாதார மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் சில நாட்களில் தாய்லாந்துக்குச் செல்லவுள்ளார்.

தாய்லாந்து, பாங்கொங் நகரில் நடைபெறவுள்ள இந்தப் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் - இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நாடுகளின் வர்த்தக முதலீடுகள், போக்குவரத்து, மின்சக்தி மற்றும் சமூகப் பொருளாதார செயற்பாடுகளின் ஒத்துழைப்போடு, நடவடிக்கை எடுப்பதற்கான வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

குறிப்பிட்ட இந்த மாநாடு பற்றிய உடன்பாடு - 1999 ஆம் ஆண்டில் காணபபட்டிருந்தாலும், இந்தத் தடவை அங்கு மாநாடு நடைபெறவுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

## அடுத்த வாரம் பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

க.பொ.த உ.த பரீட்சைப்பெறுபேறுகளை அடுத்தவாரம் வெளியிட பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையில் 2 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தோற்றியிருந்தனர்

இவர்களுக்கு அடுத்தவார ஆரமபத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை வழங்க முடியுமென பரீட்சைத்திணைக்களம் தீர்மானித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# தகவல் வட்டாரங்களை அறியும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை!

## சுதந்திர ஊடக இயக்கப் பேச்சாளர் தெரிவிப்பு

ஊடகவியலாளர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வட்டாரங்களை விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

ஊடகவியலாளர்களின் தகவல் வட்டாரங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படுமாயின், அது அடிப்படை உரிமைமீறலாகும் என்று சுதநதிர ஊடக அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொட்டாவவில் இடம்பெற்ற சம்பவம் குறித்து 'தமிழ்நெற்' இணையத்தளம் முந்திக்கொண்டு வெளியிட்ட செய்தி தொடர்பாக - அதன் ஆசிரியரை, பொலிஸார் விசாரணை செய்யப்போவதாகப் பொதுப் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகளுக்கான அமைச்சின் செயலர் திலக் ரணவிராஜா தெரிவித்த கருத்துக் குறித்தே - சுனந்த தேசப்பிரிய பொலிஸ்மா அதிபருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பினார்.

ஊடகவியலாளர்களின் கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சுனந்த தேசப்பிரிய மேலும் தமது கடிதத்தில் கோரினார்.

# எண்மரையும் சுட்டுக்கொன்றவர்கள் மூன்று வாரங்கள் ஒன்றாக தங்கியிருந்தனர்

## விசாரணையில் தகவல்

கருணாவின் குழுவைச் சேர்ந்த எட்டுப்பேரை - கொலை செய்ததாகக் கூறப்படும் இருவரும் கொட்டாவ மாலபே வீதியில் அமைந்துள்ள வீட்டில், மூன்று வாரங்கள் தங்கியிருந்ததாகப் பாதுகாப்புப் பிரிவினர் கணடறிந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா குழுவினரைச் சுட்டுக் கொன்றவர்கள் மூன்று வாரகாலத்துக்கு மேல் அவர்களுடன் தங்கியிருந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மூன்று வாரகாலமாகத் தங்கி இருந்த இவர்கள் - கொழும்பு நகரில் உள்ள பலவீடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் தமது போக்குவரத்துக்கு மொறட்டுவப் பகுதியில் வசிக்கும் பெண்மணி ஒருவரின் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியுள்ளனர்.

கொலை நடைபெற்ற வீட்டில் நிறுத்தப்பட்ட வாகனம் இந்த நபர்கள் பயன்படுத்திய வாகனம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டிலிருந்தவர்கள் கிழக்குக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு, கடந்த 24 ஆம் திகதி கொட்டாவ வீட்டுக்கு வந்து, இரவு நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

25 ஆம் திகதி அதிகாலையில் இங்கு தங்கி இருந்தவர்களில் இருவர் - அங்கு இருந்த 9 மில்லி மீற்றர் துப்பாக்கியால், தூங்கிக் கொண்டிருந்தவர்களைச் சுட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் கருணாவுக்கு மிகவும் நெருங்கியவர் எனவும், தனிப்பட்ட பாதுகாப்பில் ஈடுபட்டவர் எனவும், ஒருவர் சாரதி எனவும், மற்றுமொருவர் இணையத்தளத்துக்கு பொறுப்பானவர் எனவும் கூறபபடுகின்றது.

முன்பு கிடைத்த தகவலின்படி- பத்துப்பேர் கொல்லப்பட்டதாகவும், இதில் படைத்தரப்பைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் இரண்டு சடலங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு அகற்றப்பட்டுள்ளன என சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

இறந்தவர்களில் ஒருவரான குகனேசன் உட்பட 14 பேர் கடந்த 7 ஆம் திகதி ஹிங்குராங்கொட பபுல விகாரையில் கைதுசெயயப்பட்டபோது - சிங்கள இளைஞர் தம்மிக அங்கிருந்து தப்பிச்சென்று கைதுசெயயப்பட்டவர்களை பிணையில் விடுதலை செய்வதில் தீவிர ஆர்வம் காட்டினார். இவர் பொலநறுவையைச் சேர்ந்தவர் எனவும், வீதி அபிவிருத்தி சபையில் பணியாற்றியபோது கருணா குழுவினருடன் சேர்ந்து வாகனச் சாரதியாகச் செயற்பட்டவர் எனவும் தெரிவிககப்படுகின்றது. (தே)

# மட்டு- திருமலை தரைப்பாதையை திறப்பதற்கு கடற்படை அனுமதி

திருகோணமலை, மட்டக்களப்பு தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

விரைவில் இந்தப் பாதையால் சேவைகள் இடம்பெறும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏ-15 என அழைக்கப்படும் இந்த வீதியில், 3 மிதிவைப்பாதைகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

இதற்காக தலா 3 மில்லியன் பெறுமதியான மிதவைப்பாதைகள் கிண்ணியாவுக்கு எடுத்து வரப்பட்டுளளது. இவை உப்பாறு, கங்கை, மூதூர் ஆகிய துறைகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தத் தரைவழிப் போக்குவரத்து தடைப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(04)

# சம்பள உயர்வு வழங்கும் வரை 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## வழங்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும் வரை அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் மூவாயிரம் ரூபா விசேட கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

அரசாங்கம் இந்த வேண்டுகோளை நிறைவேற்றாவிடின், ஓகஸ்ட் மாதத்திலிருந்து நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக, அரச சேவை தொழிற்சங்கக் குழுவின் அமைப்பாளர் டபிள்யூ.எஸ். பியதாஸ தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் நிதியமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது சம்பள வேறுபாடுகளுக்குட்பட்டு, அரச சேவைகளில் ஆறு லடசம் பேர் வரை உள்ளனர்.

திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் வரை இந்த மூவாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு, ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச ஊழியர்களுக்கும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் சம்பளம் அதிகாிக்கப்படுமென அரசு கூறியிருந்தாலும், பொருட்களின் விலைகள் உயர்ந்துகொண்டே செல்வதால், அதுவரை காத்திருக்க முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# ஆயிரக்கணக்கான போராளிகளின் குருதியால் மீட்கப்பட்டதே ஆனையிறவு மண்

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு



நீண்ட நாட்களாக ஆனையிறவு உப்புத் தொழிற்சாலை எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்க ஆயிரக்கணக்கான போராளிகள் இரத்தம் சிந்தினர் என அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஆனையிறவு அயடீன் உப்பு உற்பத்தி நிறுவனத் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நீண்டகாலமாக இந்த ஆனையிறவுப் பிரதேசம் எதிரிகளின் ஆக்கிரமிப்புக்குள் இருந்தபோதே, இந்தப் பிரதேசத்தின் மீட்புக்காக எமது போராளிகள் ஆயிரக்கணக்கானோர் வீரச்சாவடைந்தும், விழுப்புண் அடைந்தும் இந்தப் பிரதேசம் மீட்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலே மீண்டும் இந்த உப்பு உற்பத்தி நிறுவனத்தைத் திறந்திருக்கின்றோமானால், இந்த நிலத்தில் எமது போராளிகளின் இரத்தமும் - சதைகளும் கலந்துள்ளன.

உண்மையில் எமது. தேசியத் தலைவரின் நீண்டநோக்கத்தின் எதிர்பார்ப்பில் ஒன்றான இந்த நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக ரெக் நிறுவனம் மேற்கொண்ட முயற்சியானது பாராட்டுக்குரிய விடயம். ஏனெனில், இந்தப் பிரதேசத்தில் உப்பு உற்பத்தி நிறுவனம் இருந்த காலப்பகுதியில் இந்த ஆலையில் எத்தனையோ தொழிலாளர்கள் பணிபுரிந்தார்கள். இந்தத தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களின், குடும்பங்கள எத்தனை பேர் இந்த உழைபபை நம்பி வாழ்நதார்கள்.

இந்தப் பிரதேசம் முற்று முழுதாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உட்படுத்தப்பட்டு, மீண்டும் பெரியதோர் யுத்தத்தின் பின்னர் மீட்கப்பட்டு, அன்று செயற்பட்டதுபோல பணியாளர்கள், பொறுபபாளர்கள், தகுதி வாய்ந்த அதிகாரிகளூடாக மீண்டும் உற்பத்தி ஆரம்பிக்கப்படடுள்ளது எனபதை எண்ணும்போது மிகவும் மகிழ்சசியாகவே உள்ளது.

இந்த ஆலையில் கடந்தகாலத்தில் இங்கு பணியாற்றிய அதிகாரிகளும், பணியாளர்களும் மீண்டும் பணியாற்றுகின்றார்கள். இவர்களின் மகிழச்சியை எம்மால் கண்டுகொள்ள முடிகின்றது. இந்த ஆலையின் உறபத்திகள் மேலோங்கிச் செல்கின்றபோது, எங்கள் மக்கள் குறைபாடுகளை நிவர்த்திசெய்கின்ற நோக்கோடு ரெக் நிறுவனம் எடுத்துக் கொண்ட முயற்சியை, பெரியளவிலான இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்கு யுனிசெவ் நிறுவனம் எடுத்துக்கொண்ட முயற்சியை என்றென்றும் நாங்கள் பாராட்டுகின்றோம். இதற்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஏனெனில், எமது தாயகப் பிரதேசத்தில் எமது மக்களின் உடல் ஆரோக்கியத்துக்கு இருக்கின்ற அயடீன் குறைபாட்டை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் யுனிசெவ் நிறுவனமானது, இந்தத் திட்டத்துக்கு ரெக் நிறுவனம் தயாரித்து, முன்வந்து கொடுத்தபோது யுனிசெவ் நிறுவனம் முன்வந்து உற்பத்தி உபகரணங்களையும், தொழில் உபகரணங்களையும் அதற்கான நிதிகளையும் ஒதுக்கித் தமது செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்த நிறுவனம் நல்ல முறையில் தமது உற்பத்திகளை மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என நிறுவனம் சார்ந்த பணியாளர்களையும், அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தப் பிரதேசம் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம். ஆண்டாண்டு காலமாக இராணுவ ஆதிக்க சக்திகளினால், இந்தப் பிரதேசம் படை முகாமாகவும், சோதனை முகாமாகவும், தடை முகாமாகவுமே செயற்பட்டு வந்தது.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தினால் மீட்கபபட்டு, அதன் போது இருந்த சூழல இன்று மாறி, எதுவித தடைகளும் இன்றி இந்தப் பிரதேசத்தில் இந்த உப்பு ஆலை ஆரம்பிக்கப்படுவதையிட்டு எமது தேசியத்தலைவர் சார்பாகவும், பொறுப்பாளர், போராளிகள், மக்கள் சார்பாகவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் நேற்றுமுன்தினம் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்

## மதமாற்றத் தடைச்சட்டப் பிரேரணை

# அரசியலமைப்புக்கு முரணானதென உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல்

மதமாற்றத்தைத் தடைசெய்யும் வகையில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது - அரசியல் யாப்புச்சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்து, உயர் நீதிமன்றத்தில் 22 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஓமல்பே சோபிததேரர் கடந்த மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இந்தக் தனிநபர் பிரேரணையை முன்மொழிந்திருந்தார்.

இது அரசியல் அமைப்பின் அடிபபடை உரிமையை மீறுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவேண்டுமானால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும், சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த, நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் கேட்டுள்ளனர்.

இந்த மனுக்களில் கிறிஸ்தவ, இந்துமத அமைப்புக்களும் மற்றும் சமூக அமைப்புக்களும், தனிநபர்களும் தாக்கல் செய்துள்ளனர்.

# ஜெயசூர்யாவின் ஆட்டமிழப்பே இந்திய வெற்றிக்குக் காரணம்!



## கங்கூலி கூறுகிறார்




ஜெயசூர்யா ஆட்டமிழந்தது திருப்புமுனையாகும். இதுவே வெற்றிக்குக் காரணமாகுமென இந்திய அணித்தலைவர் கங்கூலி தெரிவித்தார்.

கடைசி ஓவரை சுழற்பந்துவீச்சாளருக்குக் கொடுத்திருந்தால் அதிக ஓட்டங்கள் போயிருக்கும். ஷேவாக் சிறப்பாகப் பந்து வீசிவந்தார். அவருக்கு ஒரு ஓவர் கூட இருந்தது. என்றாலும் முக்கியமான இந்த ஆட்டத்தில் கடைசி ஓவரை சுழற்பந்து வீச்சாளருக்குக் கொடுக்க விரும்ப[illegible]ல்லை. இதனால் சகீர்கானை அழைத்தேன். இது நல்ல பலனைத் தந்தது.

வீரேந்திர ஷேவாக் சரியான நேரத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அவரது பந்துவீச்சும் அபாரமாக இருந்தது. இதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். வெற்றிக்காக எங்கள் பந்துவீச்சாளர்கள் மிகவும் கடினமாகப் போராடினார்கள். துடுப்பாட்டத்துக்கு சாதகமான ஆடுகளத்தில் இளம் வேகப்பந்து வீரரான இர்பான் பதான் சிறப்பாக வீசினார்.

ஆசிய கிண்ணப் போட்டியில் இந்திய வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இல்லை. இந்திய அணி சிறந்த அணியாக இல்லை. இறுதிப்போட்டியில் அபாரமாக ஆடி சிறந்த அணி என்பதை நிரூபிப்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

காயம் அடைந்த லக்ஷ்மன் குணம் அடைந்து வருகிறார். இறுதிப போட்டிக்கு அவர் உடற்தகுதி பெறுவார். இவ்வாறு கங்கூலி கூறினார்.

இதேவேளை தோல்வி குறித்து அத்தப்பத்து கூறுகையில் -

இந்தத் தோல்வி எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை. ஏனென்றால் எங்கள் அணியில் இரண்டு முதன்மைப் பந்துவீச்சாளர்கள் ஆடவில்லை.

ஜெயசூர்யா ஆட்டமிழந்தது திருப்புமுனையை ஏற்படுத்தியது. இறுதிப் போட்டியில் இந்தியாவைச் சந்திப்பது பற்றிக் கவலையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# தவறுகளிலிருந்து இன்ஸமாம் வருங்காலத்தில் பாடம் கற்பார்

## வசீம் அக்ரம் தெரிவிப்பு



அணியாக இணைந்து விளையாட ஆரம்பித்துவிட்டால் - வீழ்த்துவதற்கு கடினமான அணி பாகிஸ்தான். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அதை நிரூபித்துவிட்டனர்.

இவ்வளவு நாள் தனி ஒரு துடுப்பாட்ட வீரர் அல்லது பந்துவீச்சாளரையே பாகிஸ்தான் அணி அதிகம் சார்ந்திருந்தது. பயிற்சியாளர் பொப் வூல்மர் வருகைக்குப் பிறகு வர்ர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து விளையாடக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என வசீம் அக்ரம் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் இலங்கைக்கு எதிரான போட்டியில் மட்டுமே பாகிஸ்தான் வீரர்கள் மோசமாக விளையாடியிருக்கிறார்கள் அதுவும்கூட, அந்தப் போட்டியை மிகச்சாதாரணமாக எடுத்துக் கொண்டதால்தான் தோல்வி.

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு முழுத்திறமை காட்டியதால் வெற்றிபெற முடிந்தது. இந்தியாவுக்கு எதிராக விளையாடும்போது, போனஸ் புள்ளி எடுக்காமல் விட்டது அவர்கள் செய்த மிகப்பெரிய தவறு.

சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழந்ததும், இந்திய அணி வீரர்களை முழுவதுமாக அவுட் ஆக்கும் முயற்சியில் கப்டன் இன்ஸமாம் இறங்கியிருக்க வேண்டும். ஆனால், கப்டனான அவருக்கு அதிக அனுபவமில்லை. இனி வரும் காலங்களில் தனது தவறுகளில் இருந்து இன்ஸமாம் பாடம் படித் துக்கொள்வார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

******** இன்னும் 15 நாட்களில் ******




# ஒலிம்பிக் பதக்கங்கள் 13 கிலோ தங்கத்தில்!

ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்கங்கள் தயாரிக்கும் பணி அடுத்தவாரம் முழுமையாக முடிவடையும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸ் நகரில் அடுத்த மாதம் 13 முதல் 29 வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் வீர வீராங்கனைகளுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும்.

இம்முறை ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்காக மூவாயிரத்துக்கும் அதிகமான பதக்கங்கள் தயாராகி வருகின்றன. இவற்றைத் தயாரிக்கும் பணி ஏதென்ஸ் நகருக்கு அருகில் பாதுகாப்பாக நடந்துவருகிறது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்காக தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் தலா 986 உம், வெண்கலப் பதக்கங்கள் 1150 உம் தயாராகின்றன.

ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளிட்ட சில போட்டிகளில் மூன்றாம் இடம் பிடிப்பவர்கள் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும் என்பதால் வெண்கலப் பதக்கங்கள் அதிகமாகத் தயாராகின்றது.

பதக்கம் ஒவ்வொன்றும் 150 கிராம் எடையும் ஆறு சென்ரிமீற்றர் குறுக்களவும் (விட்டம்) கொண்டதாக இருக்கும். இதற்காக 13 கிலோ தங்கம் ஒரு தொன் வெள்ளி மற்றும் வெண்கலம் பயன்படுத்தப்படுகின்றது.

பதக்கங்கள் தயாரிக்கும் பணி ஏறக்குறைய முடிந்துவிட்டது. அடுத்த வாரம் பதக்கங்கள் ஒலிம்பிக் அமைப்பினரிடம் ஒப்படைக்கப்படும்.

# அடுத்த போட்டித் தொடர்களுக்கான இந்திய அணி அடுத்த வாரம் தெரிவு

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிய கிண்ணத் தொடருக்கான கிரிக்கெட் போட்டிகள் முடிவுற்றவுடன் ஐ.சி.சி சம்பியன் தொடர் உட்பட, அடுத்துவரும் தொடர்களுக்கான இந்திய கிரிக்கெட் அணி தேர்வுசெய்யப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

ஆசிய கிண்ணத் தொடர் முடிவடைந்த பிறகு இந்திய கிரிக்கெட் அணி ஹொலண்ட் செல்கிறது. அங்கு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இங்கிலாந்து செல்லும் இந்திய அணி - இங்கிலாந்து அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ.சி.சி சம்பியன் போட்டிகள் இங்கிலாந்தில் தொடங்கவுள்ளன. அந்தத் தொடரில் மொத்தம் 12 அணிகள் 4 பிரிவாக பிரிந்து ஆடுகின்றன. அத்தொடருக்கான அணியை அதில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நாடும் ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்குள் தேர்வுசெய்து அறிவித்து விடுமாறு ஐ.சி.சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்கூறிய மூன்று தொடர்களுக்கான ஒரே அணியை ஐ.சி.சி அடுத்த வாரம் தேர்வுசெய்ய வாய்ப்புள்ளது என்று கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தார்.

அம்ஸ்டர்டாமில் (ஹொலண்ட்) நடைபெறவுள்ள முத்தரப்பு தொடர் ஓகஸ்ட் 21 முதல் 28 வரையிலும், தொடர்ந்து இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடர் செப்ரெம்பர் முதல் வாரத்திலும் நடைபெறவிருப்பதால், ஐ.சி.சி சம்பியன் போட்டிகள் செப்ரெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதால், குறுகிய கால இடைவெளிதான் உள்ளது என்றும், இந்த மூன்று தொடர்களுக்கான இந்திய அணியை ஒரே அணியாகத் தேர்வுசெய்ய அதிக வாய்ப்பிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.




# மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

## புட்சர் ஆடவில்லை

எட்ஜ்பாஸ்டனில் இன்று தொடங்கவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும், இங்கிலாந்து அணியின் வீரர் மார்க் புட்சர் ஆடமாட்டார் என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது ஆடிவருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களால் வென்று 1-0 என்ற முன்னிலையை எட்டியுள்ளது.

காயம் காரணமாக லோர்ட்ஸில் நடந்த போட்டியில் புட்சர் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக மாற்று வீரராக இங்கிலாந்து அணியில் ரொபர்ட் கீ இடம்பெற்றார்.

எட்ஜ்பாஸ்டனில் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டிக்கு முன்னதாக அவர் குணமடைந்து விடுவார் என்று அப்போது இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

ஆனால், புட்சருக்குப் பதிலாக இடம்பெற்ற ரொபர்ட் கீ லோர்ட்ஸில் அபாரமாக ஆடி இரட்டைச் சதம் அடித்து 221 ஓட்டங்களைக் குவித்தார்.

எனவே இரண்டாவது போட்டிக்கு முன்னதாக புட்சர் குணமடைந்து விட்டால் ரொபர்ட் கீயை நீக்கிவிட்டு புட்சரைத் தேர்வுசெய்வார்களா என்ற கேள்வி இங்கிலாந்து கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் எழுந்தது.



அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக இரண்டாவது போட்டிக்கான அணியை அறிவித்தனர் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் தேர்வாளர்கள். அந்த அணியில் மார்க் புட்சர் இடம்பெறவில்லை. ரொபர்ட் கீதான் இடம்பெற்றுள்ளார்.

புட்சர் இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை என்றும், எனவே அவருக்குப் பதிலாக ரொபர்ட் கீ அணியில் நீடிக்கிறார் என்றும் தேர்வாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

புட்சரின் வலதுகால் தொடைப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை என்று அவருக்குச் சிகிச்சையளித்து வரும் மருத்துவர்கள் அறிக்கை அளித்துள்ளனர் என்று தேர்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# களத்தடுப்புக் கட்டுப்பாட்டை முற்றாக நீக்கிவிட வேண்டும்

## ஜாவிட் மியாண்டட் கூறுகிறார்

(இஸ்லாமாபாத்)

ஒருநாள் போட்டியில் முதல் 15 ஓவர்களில் இருக்கும் களததடுப்புக் கட்டுப்பாட்டை நீக்கவேண்டும் என்று, பாகிஸ்தான் முன்னாள் கப்டனும், முன்னாள் பயிற்சியாளருமான ஜாவிட் மியாண்டட் கூறியுள்ளார். அகமதாபாத்தில் அளித்த பேட்டியில் அவர் இது தொடர்பாகக் கூறியிருப்பதாவது -

ஒருநாள் போட்டியில் முதல் 15 ஓவர்களில் துடுப்பாட்ட வீரர்கள் அடித்து ஆடக்கூடிய அளவுக்கு களத்தடுப்பு விதி உள்ளது. அதாவது, 2 வீரர்கள் மட்டும் எல்லைக் கோடு அருகே நிற்கவேண்டும், மற்ற வீரர்கள் வட்டத்திற்கு உள்ளேதான் நிற்கவேண்டும்.

இதனால், தொடக்கத்தில் ஆடும் வீரர்கள் பந்தைத் தூக்கி அடிப்பார்கள். முதல் 15 ஓவர்களில் ஓட்டங்களைக் குவிக்கமுடியும்.

1996 ஆம் ஆண்டு நடந்த உலக கிண்ணப் போட்டியில் இலங்கையின் தொடக்க வீரர்களான, ஜெயசூர்யா-களுவிதாரண ஜோடி இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு, முதல் 15 ஓவர்களில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது.

அதே யுக்தியை இறுதி ஆட்டம் வரை கடைப்பிடித்து 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை அந்த அணி கைப்பற்றியது.



முதல் 15 ஓவர்களில் களத்தடுப்பில் கட்டுப்பாடு இருப்பது பந்து வீச்சாளர்களுக்கு எதிரானதாகும். தற்போது துடுப்பாட்ட வீரர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பந்துவீச்சாளர்களின் பங்கை எவரும் உணரவில்லை.

இந்தக் களத்தடுப்பு கட்டுப்பாட்டால் வளர்ந்துவரும் நாடுகள்தான் பாதிக்கப்படுகின்றன. தலைசிறந்த பந்துவீச்சாளர்கள் கூட இதில் பாதிக்கப்படுகிறார்கள்.

உலகின் அதிவேகப்பந்து வீச்சாளரான சொகைப் அக்தரும், வளர்ந்து வரும் இளம் வீரரான இர்பான் பதானும் கூட இதனால் சோர்ந்து விடுகிறார்கள். இந்தக் களத் தடுப்புக் கட்டுப்பாட்டால், அதிகளவு ஓட்டங்களை விட்டுக்கொடுப்பது தவிர்க்க முடியாததாகும்.

துடுப்பாட்ட வீரர்களின் திறமை கூட இதனால் பாதிக்கப்படுகிறது. அதிரடியாக அடித்து ஆடுபவர்களுக்குத்தான் மரியாதை இருக்கும். ஒரு பந்தை எப்படி ஆடுவது என்பது கூடத் தெரியாமல் இருப்பவர்கள், தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களாக உள்ளனர். இதற்குக் களத்தடுப்புக் கட்டுப்பாடே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### கே.சி.சி.சி கிண்ண இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டிருந்த இந்தப் போட்டி மழையினால் ஒத்திப்போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உணவகங்களின் சுகாதாரம் குறித்து அடுத்த வாரம் முதல் பரிசோதனை!

## யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள தேனீர்க் கடைகளில் - சுகாதாரம் பேணும் தன்மை குறித்து, அவதானிக்கும் நடவடிக்கை அடுத்த வாரம்முதல் ஆரம்பிக்கப்படும் என, யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்கள உதவி ஆணையாளர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். மாவட்டத்தில் வசிப்போர் மத்தியில் அதிகளவில் குடல் சம்பந்தமான நோய்கள் அதிகரித்து வருவதால், உணவுப் பழக்கவழக்கங்களில் யாழ்.மக்கள் கவனம் எடுக்கவேண்டியுள்ளது.

தேனீர்க் கடைகளில் சுத்தம் பேணப்படுவது மிகவும் அவசியம். அண்மைக்காலமாக எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில பல தேனீர்க் கடைகள் மக்களின் நலன்களைக் கவனிக்காது, சுகாதாரச் சீர்கேடான முறையில் செயற்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

இத்தகைய சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்ப்பதன் மூலம் குடல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதைத தவிர்த்துக்கொள்ள முடியும். இதனடிப்படையில் அடுத்த வாரம்முதல் தேனீர்க் கடைகளில் சுத்தம் பேணப்படுகின்றமை தொடர்பாக சுகாதார அதிகாரிகள் பரிசோதனை நடத்தவுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு மாதகாலத்தில் 50 பேர் மாத்திரமே டெங்கு நோய்க்கு உட்பட்ட நிலையில், யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால், டெங்கு ஓரளவாயினும் எமது பிரதேசத்தில் இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இது இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தாக்கத்திலும் மிகக் குறைவானதே.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு மாதகாலத்தில் 272 பேர் நெருப்புக்காய்ச்சலுக்கு உட்பட்டிருக்கின்றனர். இதனைத் தடுக்கும் வகையிலும் நாம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். காரைநகர்ப் பகுதியில், ஆலயத் திருவிழா ஒன்றிற்குச் சென்ற மக்கள் - அங்கு பாழடைந்த கிணற்றிலிருந்த நீரை அருந்தியதால் பரவிய நெருப்புக்காய்ச்சல் இப்போது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



யாழ். மாநகரச்சபை முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற உடற்பயிற்சிக் கண்காட்சி.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட மரம்நாட்டு நிகழ்வில் ஓமானில் வசித்தவரான எஸ். சண்முகராசா என்பவர் மரக்கன்று ஒன்றை நாட்டுவதைக் காணலாம். (17)

# வீட்டுத் திட்டப் பணிகள் செப்ரெம்பருக்குள் முடிவடையும்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகள் ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் மாதத்தினுள் கட்டி முடிக்கப்படவேண்டும்.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் செயலக அதிகாரிகள் கொண்ட குழுவினர், அண்மையில் வடமராட்சி கிழக்கின் ஆழியவளை கிராமத்துக்குச் சென்று, வீடுகள் பெறவுள்ள 25 பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

மாவட்டத்துக்கு 100 வீடுகள் என்ற திட்டத்தில், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஆழியவளையில் 25 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (122)

## மருதங்கேணி

# வைத்தியசாலை கட்டடங்களை ஒப்படைப்பதில் கால தாமதம்

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடங்களை சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதில் மேலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 24 ஆம் திகதி வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை, சுகாதாரத் திணைக்களத்திடம ஒப்படைப்பதாக அறிவித்திருந்த போதிலும், மின் இணைப்பு மற்றும் சிறு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதால் மேலும் இரண்டு வாரங்கள் அவகாசம் கேட்கப்பட்டுள்ளது.

நிகொட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இன்னமும் வந்துசேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் 2 கோடி 30 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

வைத்தியசாலையைப் புனரமைப்பதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (122)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : பா.அனிஷா
முகவரி : பாஷையூர், யாழ்ப்பாணம்

ஆறாவது அகவையில்



பெயர் : இ.பவித்திரா
முகவரி : 'பவி வாசா' மானிப்பாய்

ஆறாவது அகவையில்



பெயர் : செ.பிரிந்திக்கா
முகவரி : 'கமலரதி' கலட்டி

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில்

# யாழ். மாவட்டத்துக்கு தனி அலுவலகம் அமைத்தால் பணிகளை இலகுபடுத்தலாம்

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் யாழ். மாவட்டத்துக்கான பணிகளை மேற்கொள்ள தனியான அலுவலகம் செயற்பட்டால், பணிகள் தாமதவதைத் தவிர்க்கலாம் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். மாவட்டத்தில் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றன பலகாலமாக வழங்கப்படாத நிலையில், கடந்த சில ஆண்டுகளாகவே அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், பெருந்தொகையானவர்களின் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட பல வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.

எம்மால் அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கான வேலைகள் உரிய காலப்பகுதியில் முடிவடையாத நிலையில் பலர் தமது ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லையென எம்மிடம் வந்து முறையிடுகின்றனர். அதுமட்டுமன்றி எம்முடன் முரண்படவும் செய்கின்றனர்.

இதற்கு எம்மீது எவரும் கோபப்படமுடியாது. ஏனெனில், எமது கடமைகளை நாம் சரியாகச் செய்து அனுப்புகிறோம். வேலைப்பழுக்கள் காரணமாக கொழும்பிலிருந்து அவை வருவதற்குத் தாமதமாகின்றன.

இத்தகைய காலதாம் ஏற்படுதல், மற்றும் ஆவணங்கள் தொலைந்து போதல் முதலான சிக்கல்களைத் தவிர்ப்பதற்குக் கொழும்பில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் யாழ். மாவட்டப் பணிகளை மேற்கொள்வதற்குத் தனியான அலகு ஒன்று இயங்குதல் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## மார்ச் மாத நிவாரண விநியோகத்திற்கு

# அமைச்சரவையில் முடிவில்லை; அரிசி கொள்வனவில் தாமதம்!

மார்ச் மாத நிவாரண விநியோகத்துக்கான அமைச்சரவை முடிவு கிடைக்காமையால், அரிசி கொள்வனவில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளையின் திட்டமிடல் பணிப்பாளர் டி.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து சமுர்த்தித்திட்டத்தை அமுல செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு புதிய அரசாங்கமும் இதனையே வலியுறுத்தியது. இதனால், நிவாரண விநியோகத்தில் பாரிய நெருக்கடி நிலை தோன்றியது.

இந்நிலையில், முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் நிவாரண விநியோகத்திற்கான பொருட்களின் கேள்விகோரல் மற்றும் நிவார விநியோகம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் அரச அதிபரின் கீழேயே இருந்தன. ஆனால், புதிய அரசின் புதிய திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் யாவும் அமைச்சரவையின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் மார்ச் மாத நிவாரண விநியோகத்துக்கான அரிசி பெறுவதற்கு கேள்வி கோரப்பட வேண்டுமாயின் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கவேண்டும். ஆனால், இதுவரை எமக்கு அனுமதி கிடைக்கவில்லை.

அத்துடன், கோதுமை மாவும் போதியளவில் கையிருப்பில் இல்லை. ஆனால், மே மாதம்வரை பொதுமக்களுக்கு நிவாரண விநியோகம் மேற்கொள்ளத்தக்க வகையில் ஏனைய பொருட்கள் கையிருப்பிலுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

## புலமைப் பரிசில் வழிகாட்டி வெளியீட்டுவிழா

சங்கானை மக்கள் வங்கியின் அனுசரணையுடன், சங்கானை கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தால் வெளியிடப்படும் 'புலமைப்பரிசில் வழிகாட்டி' நூல் வெளியீட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானை கல்விக்கோட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ்.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கப் பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் தலைவர் க.சிறீராஜன் தலைமையில் நடைபெறும்.

அன்று முழுநாளும் கடைகளை மூடி உரிமையாளர், தொழிலாளர், குத்தகை நடத்துநர் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(206)

## மட்டுவிலில் நிதி சேகரிப்பு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தினரால், பொதுமக்களிடம் இருந்து நிதி சேகரிக்கப்பட்டுவருகின்றது.

இந்தச் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் பாலர் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காகவும், கண்ணகை விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான காணி கொள்வனவுக்குமாகவே இந்த நிதி சேகரிப்பு நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

(24)

## ஆலய மஹோற்சவம்

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும்.

ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (17)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் - பிரதி வெள்ளிக்கிழமை தோறும், நடைபெற்று வரும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு நிகழ்வில் நாளை பிற்பகல் 5.30 மணிக்கு - "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" எனும் பொருள்பற்றி, ஆசிரியர் இராம.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## பாவனைப் பொருட்கள் அன்பளிப்பு

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் இலவசமாக வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த இலவச வீட்டுப் பாவனைப் பொருட்களைப் பெற்றன.




# தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய தரச்சுற்று முகாமை



முகாமைத்துறையில் தரச்சுற்று என்பதைத் தமிழில் தரவட்டம், தரக்குழுக்கள் என்றும் அழைக்கின்றனர். இன்று தரச்சுற்றுக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள பல்வேறுபட்ட தொழில் நிறுவனங்கள், இதனைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றன.

ஒரு தொழில் நிறுவனத்தில் நிலவும் பல்வேறுபட்ட உற்பத்தித்திறன் குறைபாட்டினைப் போக்குவதற்குத் தரச்சுற்று முகாமை அவசியமானது. அத்துடன், நாட்டின் சிறந்த பிரஜைகளை உருவாக்கவும், தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கவும் தரச்சுற்று முறை பெரிதும் உதவும்.

முகாமைத் துறையில் கைக்கொள்ளப்படும் பிரதான அம்சங்களான குழுவாகச் செயற்படல் குழு ஆலோசனை முறை, கூட்டாக வேலை செய்தல் என்ற சிந்தனைகள் சிறந்த முறையில் பலன்தர வேண்டுமெனில், இந்தப் பழக்க வழக்கங்கள் பாடசாலை மட்டத்திலேயே வழக்கத்துக்கு வரவேண்டும்மென்று பல முகாமை அறிஞர்களினால் கூறப்படுகின்றது.

**தரச்சுற்று என்றால் என்ன**

தரச்சுற்று என்பது ஒரு நிறுவனத்திலுள்ள ஒரு குறித்த இயல்புள்ள, பணியைச் செய்கின்ற ஊழியர்கள் சிறு தொகையினராக ஒன்றுகூடித் தமது பணி தொடர்பான பிரச்சிரனைகளைத் தீர்ப்பதற்காக ஒருங்கிணைந்து செயலாற்றும் ஒரு செயற்பாடாகும்.

ஒரு வேலையைச் செய்கின்ற பணியாளர்கள் - அந்தவேலையில் பங்குள்ளவர்களாக அந்தவேலையால் பெருமை கொள்ளக் கூடியவராகத் தாம் செய்யும் வேலை தொடர்பில் தீர்மானம் எடுக்கும்போது, அதில் பங்கு கொள்பவர்களாக, அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்புள்ளவர்களாக, மாற்றுவதே தரச்சுற்றின் நோக்கம்.

பொதுவாக இவ்வாறான ஒரு குழுவில் 5-10 வரையான உறுப்பினர்கள் பங்குகொள்வதே பொருத்தமானதாகக் கருதப்படுகின்றது. இதற்குக் காரணம் ஒரு குழுவில் அங்கத்தவர்கள் அதிகமாக இருந்தால், எல்லோரும் தமது கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் கிடைக்காது. இதனால், அங்கத்தவர்கள் பங்களிப்பாளராகவன்றி, பார்வையாளராகவே இருந்து விடுவார்கள்.

தரச்சுற்று அங்கத்தவர்களிடையே ஒரு குறித்த இயல்புள்ள தொழிலைச் செய்பவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுவதற்கான காரணம் - அவர்களிடையே பல ஒற்றுமைப் பண்புகள் இருக்கும் என்பதே ஆகும்.

அத்துடன், அவர்களுடைய பிரச்சினைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியானதாக இருப்பதனால், தமது தொழில் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பது இலகுவானதாக இருக்கும்.

இந்தத் தரச்சுற்று நடவடிக்கை கூட்டங்களில் கட்டளை முறை கடைப்பிடிக்கப்படுதல் பொருத்தமாயினும் -

★ கருத்துக்களைக் கூறும் உரிமை.

★ பிரச்சினைகளைத் ஆராய்ந்து, அறியும் உரிமை.

★ சுதந்திரமானதாக இருத்தல்.

★ பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகள் போன்றவைகள், தரச்சுற்று நடவடிக்கைகளில் பங்குபற்றும் அங்கத்தவர் மத்தியிலிருந்தே பெறப்படுதல்வேண்டும்.

**தரச் சுற்றினால் ஏற்படும் நன்மைகள்**

தரச்சுற்றுக் குழுவானது - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு குழுவாகும். தாம் தொழிலாற்றும் பகுதியிலிருக்கும் பிரச்சினைகளை இனங்காணுதல், அந்தப் பிரச்சினைகளைக் குழுவின் முன்வைத்தல், அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டுபிடித்தல் என்பவற்றில் சம்பந்தப்பட்ட குழு உறுப்பினர்களே பங்கேற்கின்றனர்.

இந்தக் குழு உறுப்பினர்கள் தாமே தமக்குள் இருக்கும் அந்நியோன்னிய உறவினால், தமது தொழில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இந்த நிலைமை, அவர்கள் தொழில் செய்யுமிடத்தில் ஒரு அமைதிச் சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றது. ஒரு வேலையைச் செய்து முடிப்பது அல்லது நோக்கத்தை நிறைவேற்றுவதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் யாவரும் பங்காளிகள் ஆக்கப்படுகின்றனர். இந்தநிலைமை நல்லதோர் தொடர்பாடல் முறையை தோற்றுவிக்கின்றது.

குழுவாக இயங்கும் தன்மை உருவாகிறது. முகாமையுடன் தனிப்பட்டரீதியில் அன்றிக் குழுவின் தீர்மானம் என்ற வகையில் பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன. இது தனிப்பட்டோர் பிரச்சினைகளைத் தீர்ப்பது முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இலகு வாக இருக்கும்.

தரச்சுற்று முறையினால் நிறுவனத்தின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியாவிட்டாலும், அந்தந்த மட்டத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். எனவே, 'எந்தவொரு முகாமை மட்டத்திலுள்ளவர்களும் தமது பகுதி யில் தரச்சுற்று நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கலாம்.

ஒரு பகுதியைச் சேர்ந்த தலைவர் இந்தக் குழுக்கள் செயற்படுவதற்கு வழிகாட்டியாக வும், இணைப்பாளராகவும் இயங்குதல் வேண் டும். தரச்சுற்றுக் குழுவின் தலைவருக்கு வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்கி, அவர் களூடாக குழுவின் தலைவர் சக தொழிலாளர்களுக்கிடையிலிருந்து தெரிவுசெய்யப் படல் வேண்டும்.

தரச்சுற்று கூட்டத்தினது தீரமானங்கள் - சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கப்படவேண்டும். இந்த நடவடிக்கைகளால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து, மீளாய்வு செய்யப்படல் வேண்டும். புதிய திட்டங்களைச் செயற்படுத்தும்போது, தரச்சுற்றுக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் நன்று.

**தரச்சுற்று நடவடிக்கைகள் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் -**

★ விரயங்களைத் தவிர்த்தல்.

★ சக்திகளைச் சேகரித்தல்.

★ ஒரு பணியைச் செய்வதற்க இலகுவானதும், செம்மையானதுமான வழிமுறைகளைத் தெரிதல்.

★ உற்பத்தி இயந்திரங்களினதும், உபகரணங்களினதும் இயல்பளவைப் பயன்படுத்தல்.

★ தரக்கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தல்.

★ சுத்தத்தைப் பேணுதல்.

★ சிறந்த தொடர்பாடலை விருத்தி செய்தல்.

★ நிறுவனத்தின் பல்வேறு அமைப்புக்குள்ளும், உச்சமட்ட முகாமையுடனும், புரிந்துணர்வுகளை வளர்த்தல்.

பின்வரும் விடயங்கள் தரச்சுற்று நடவடிக்கைகளில் விவாதிக்கப்படலாகாது. இந்த விடயங்கள் - முகாமை மட்டத்தினால் செய்யப்பட வேண்டுமென்பதைத் தரச்சுற்று ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

★ நிறுவனத்தின் கொள்கைகள், விதிமுறைகள்.

★ தொழிற்சங்க நடவடிக்கைகள்.

★ ஊழியர்களின் நடைமுறைப் பிரமாணங்கள், ஒழுங்கு விதிகள்.

★ வரவு - செலவுத் திட்டங்கள், கணக்காய்வு அறிக்கைகள்.

★ வேலைத் திட்டங்கள், நிறுவன நோக்கங்கள்.

★ ஒழுங்காற்று நடவடிக்கைகள், பதவி உயர்வுகள்.

★ ஏனைய முகாமைத்துவ நடவடிக்கைகள்.

தரச்சுற்றின் ஒழுங்கமைப்பு - திட்டம், செயல், பரிசீலனை, நடவடிக்கை என்ற படிமுறையினூடாகக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். இவற்றை ஒன்றின் பின் ஒன்றாகப் பார்ப்போம்.

### திட்டம்

முதலில் எந்தத் துறையில் குறைபாடு காணப்படுகிறது அல்லது எந்தத் துறையினுடைய செயற்பாடுகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்பதைத் தெரிதல் வேண்டும். அதற்கான தகவல்களைத் திரட்டவேண்டும். பிரச்சினையான பகுதிகளைத் தெரிந்து, அதில் சம்பந்தப்பட்டவர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். பின்னர் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.

இந்தக் குழுக்குள்ளும், தமக்கு நேரடியாகப் பொறுப்பாக இருக்கின்ற அதிகாரிகளுடனும், குறித்த பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவேண்டும். விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து விவாதங்களின் அடிப்படையில், இந்தப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் எனவும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இலக்குத் திகதிகளை முன்வைக்க வேண்டும்.

விவாதங்களின்போது, பிரச்சினைகள் குறித்து, மீளாய்வு செய்தல் வேண்டும். இந்த மீளாய்வின்போது குழு உறுப்பினர்களிடையே மூளைப் பரிமாற்றத்தினூடாக முடிவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, தீர்வுகள் நிரல் படுத்தப்படவேண்டும். இறுதியில் எவ்வாறு இந்தப் பிரச்சினையை அணுகுவது என்பது குறித்து, முடிவுக்கு வரவேண்டும். அந்த முடிவை செயற்படுத்துவதாக ஒருமித்துத் தீர்மானிக்க வேண்டும்.

### செயற்பாடு

நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் குறிதது, தனது மேற்பார்வையாளர்களுடன் கலந்துரையாடும் பொழுது, பின்வரும் நன்மைகள் கிட்டும்.

★ இருவருக்குமிடையில் புரிந்துணர்வும், இணைப்பும் ஏற்படும்.

★ செய்யும் கடமைகள் குறித்து, தனக்கும் அறிவிக்கப்படுகின்றது என்ற திருப்தி, குறித்த மேற்பார்வையாளருக்கு ஏற்படும்.

★ மாற்றுக் கருத்துகள் பற்றி அறிய முடியும்.

# தொழில் நிறுவனமொன்றில் நேரத்தை திட்டமிடுதலும் செயலாற்றலும்

**வே**லையின் குறிக்கோளைத் தீர்மானித்து, அந்தவேலைகளை எப்போது, யார், என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என நிச்சயித்துக்கொள்ள வேண்டும். பணிகள் ஒவ்வொன்றையும் தினசரிப் பணிகளாகப் பிரித்து, எந்த வேலைகளைச் செய்யும்போது, கூடுதல் நேரம் எடுக்கும் என்பதை அவதானிக்க வேண்டும். ஒவ்வொரு வேலையையும் செய்வதற்குப் பொருத்தமானதும், இலகுவானதுமான செய்முறைகளை அறிந்து, அந்த வே[illegible]களைச் செய்யும்போது அதில் படிப்படியான முன்னேற்றம் நிகழுகிறதா எனப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதன ஒரு படிமுறையாக தேடுதல் நேரத்தைக் குறைக்கவும், பணிகளுக்கான பொருட்கள், உபகரணங்களை ஒழுங்கு முறையாக வைத்துக் கொள்ளவும் ஜப்பானிய 5S உத்திகள் பயன்படுகின்றன.

☆ தேவையற்றவற்றை நீக்குதல்.

☆ பொருட்களை எப்போதும் ஒரே இடத்தில் வைத்துப் பயன்படுத்துதல்.

☆ சுற்றுப் புறத்தையும், அலுவலகத்தையும் துப்பரவாக வைத்திருத்தல்.

☆ எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தரத்தைப் பேண உதவுதல்.

☆ மேற்கூறிய நடைமுறைகளை எப்போதும் பேணுவதற்கான ஏற்பாட்டைச் செய்தல்.

இந்த ஐந்து நடைமுறைகளையே இந்த ஜப்பானிய 5S தத்துவம் விளக்குகிறது. இந்த உத்திகளை அலுவலகம், தொழில் நிறுவனங்களில் கையாலும்போது, கணிசமான நேரவிரயத்தைக் குறைக்க முடியும்.

ஒவ்வொரு நாள் முடிவிலும், அடுத்த நாள் செய்ய வேண்டிய அலுவலக வேலைகளைப் பட்டியலிட்டுக் கொள்ளவேண்டும். இந்தப் பட்டியலை அலுவலக மேசையில் அல்லது குழுவாக வேலைசெய்யும் பொது இடத்தில் காணக்கூடியவாறு வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொதுவாக நாம் செலவிடும் வேலை நேரத்தை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

☆ இலக்கை அடைய உதவும் வேலை நேரம்.

☆ பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக உதவும் வேலை நேரம்.

☆ பிறரது அவசரத் தேவைகளுக்காக உதவும் வேலைநேரம்.

☆ வீணாகச் செலவிடும் வேலைநேரம்.

இந்த 4 வகை வேலைகளுக்கும் எவ்வாறு நேரம் செலவாகியது என்பதை மணித்துளிகளைக்கூட்டி, அவை எவ்வளவு சதவிகிதத்தை எமது முழுநேர வேலை நேரத்தில் எடுத்துள்ளன என்பதை அவதானிக்கலாம். இவ்வாறு கணக்கிட்டுப் பார்க்கும்போது, எமது நேரத்தை நிறைவேற்ற எவ்வளவு மணி நேரம் செலவழித்தது என்பதைக் கவனித்து, வீணாகும் நேரத்தை எதிர்காலத்தில் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன், போதிய பயிற்சியைப் பெற்றுக் கொள்வதனூடாக நேரத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியும். பொதுவாக நாம் வழமையான செயல்களைச் செய்வதற்கே விரும்புகிறோம். மாறுதல்களை எமது மனம் படிப்படியாகத் தான் ஏற்றுக்கொள்கின்றது. நேர நிர்வாகத்தை ஒழுங்கு பண்ணும்போது, தற்பொழுது எனது நேரம் எங்கெங்கு வீணாகிறது என ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் வேண்டும்.

இவ்வாறு வீணாகச் செலவாகும் நேரத்தை நாள், வாரம், மாதம், வருடம், எனக் கணித்தால், எவ்வளவு மணித்தியாளங்களை வெறுமனே வீணாக்குகின்றோம் எனப் புரிந்து கொள்ளலாம். பொதுவாக நேரம் பின்வருவனவ[illegible]றுக்காக வீணாவதை அவ[illegible]னிக்கலாம.

☆ வீண் அரட்டை.

☆ பொழுதுபோக்[illegible]கு.

☆ திட்டமிட[illegible]மல் வேலையை ஆரம்பிப்பதனால் ஏற்படும் தாமதம்.

☆ உரிய நடைமுறைகள் அல்லது உபகரணங்கள் இன்மையினால் ஏற்படும் நேர விரயம்.

☆ மேலதிகாரிகளின் அல்லது மற்றவரிகளின் திருப்திக்காகச் செலவிடும் நேரங்கள்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் எமது நேரம் வீணாகின்றபோதும், பொதுவாக இவற்றுள் பல தவிர்க்க முடியாதனவாக இருக்கலாம். இவ்வாறு தவிர்க்க முடியாத நேரங்கள் போக - மிகுதியாகவுள்ள நேரமே நாம் சுதந்திரமாகப் பணியாற்றும் நேரமாகும். இவ்வாறு பணிபுரியக் கிடைக்கும் காலத்தை ஒழுங்கு முறையாகப் பயன்படுத்துவது இனறியமையாததாகும்.

எமது நோக்கம், குறிக்கோள், இலக்கு என்பவற்றில் பற்று இருந்தால்தான், நேரததை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

அத்துடன், வேலையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மகிழ்ச்சிகரமானதாக இருக்க வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத் தோறறுவிக்கவேண்டும்.

நேர முகாமை என்று கூறுவதன் பொருள் - ஓய்வற்ற உழைப்பை ஊக்குவித்தல் என்பதல்ல. ஒரு நடவடிக்கையின் முடிவில் அது வெற்றியை எட்டவேண்டும். பரபரப்பு இல்லாமல நிம்மதியாக வேலைக்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# கத்தரிச் செடியை தாக்கும் நோயும் அதற்கான தீர்வும்



எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப் படும் மரக்கறி வகைகளில் பிரபல்யமான மரக்கறியாகக் கத்தரிக்காயைக் குறிப்பிட



லாம். கத்தரிக்காய் ஒரு மூலிகை என்பது பலருக்குத் தெரியாது. எனவேதான் சித்தர் கள் மரியாதையுடன் 'பத்தியக் கறி' என்று இதனை அழைக்கிறார்கள். நம் இலக்கியங் களில் இதுவே வழுதுணங்காய் என அழைக் கப்படுகிறது. 'மூர்த்தி சிறியதாயினும், கீர்த்தி பெரியது' எனும் பழமொழிக்குச் சரியான எடுத்துக்காட்டு கத்தரிக்காய்.

இங்கு மட்டுமல்ல ஆசியாவில் கத்தரிக் காயைப் பயிரிடும் அனைத்து நாடுகளுக் கும் பொதுவாகக் கத்தரித் தண்டுகளையும், கத்தரிக்காயையும் ஓட்டையாக்கும் கிருமி யின் பாதிப்பு, பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

சாதாரணமாக கத்தரி பயிரிடும்போதே, பாதிப்பின் அறிகுறிகள் ஆரம்பத்திலிருந்தே காணப்படும். இதன்போது பயிரின் முற்றாத தண்டுகள் வாடுவதை அவதானிக்கலாம். ஆனால், பூப் பூக்கும் சந்தர்ப்பத்தின்போதே வெளிப்படுகின்றது. இதன் விளைவாக, காய் கள் காய்க்கும்போது, அதிக பாதிப்பை ஏற் படுத்துகின்றன. இதன்பின்னர், தண்டுகளின் பாதிப்புக் குறைவடையும். சில சந்தர்ப்பங் களில் கூட்டுப்புழுக்கள் - பூக்களை உண்ணு கிறது. இதனால், காய் காய்ப்பது குறை வடைந்து விளைச்சலில் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்தப் புழுவின் வாழ்க்கை வட்டம் ஒன் றுக்கொன்று வித்தியாசமான 4 சந்தர்ப் பங்களைக் கடக்கின்றன. முட்டையாக, கூட் டுப்புழுவாக, புழுவாக இறுதியாக பூச்சியாக உயிர் வாழுகின்றன.

வளர்ச்சியடைந்த பெண் பூச்சி - கத்தரி மரத்தின் இலைகளில் சிறியவெள்ளை நிறத்தைக் கொண்ட முட்டைகள் போடும். 4-5 நாட்களுள் இந்த முட்டைகள் உடைந்த பின்பு, சிறிய கண்ணுக்குத் தெரியாத கூட்டுப் புழுக்கள் வெளியே வருகின்றன. வெளிவந்த இந்தக் கூட்டுப்புழுக்கள் அருகிலுள்ள முற்றாத தண்டுகளை அல்லது காய்களை ஓட்டையாக்கி, அதற்குள் நுழைகின்றன. இவ்வாறு நுழைந்த கூட்டுப்புழு 15-20 நாட்களுக்குள் கத்தரிக் காய்க்கும், காம்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தி யவாறு அதற்குள் வளர்ச்சியடைகின்றது.

நன்றாக வளர்ச்சி அடைந்த புழு ரோஸ் நிறமாக இருக்கும். கூட்டுப்புழுவான பின்பும் புழுவாக இருக்கும் பொழுது மட்டுமே, கத்தரிப் பயிருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

கத்தரிக்காய்க்குள் இருந்து நன்றாக வளர்ச் சியடைந்த இந்தப் புழு - பின்னர் மண்கூடு களைத் தயாரித்துக் கொள்வதற்காக இரவு நேரத்தில் தாம் இருக்கும் இடத்திலிருந்து வெளியே வந்து மண்ணுக்குள் செல்லும். சாதாரணமாக இந்தச் செயற்பாடு இரவு நேரத் தில் நடைபெறுவதால், பெரும்பாலான விவசாயி கள் இதனை அவதானிப்பதில்லை.

மண்ணுக்குள் வந்த இந்தப் புழு, பூமி மட்டத்துக்கு கொஞ்சம் கீழ் மண்ணுக்குள் கூட்டை உருவாக்கி அதற்குள் உயிர்வாழுகின் றன. இந்த மண்கூடு மிக இறுக்கமாக உரு வாக்கப்பட்டிருப்பதால், கூட்டில் இருக்கும் புழு வுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லீல்.

ஏழு நாட்கள் இந்த மண்கூட்டுக்குள் உயிர் வாழும் இந்தப் புழு வளர்ச்சியடைந்து, சிறிய பூச்சியாக வெளியே வருகின்றது. இதன் சிறகு கள் சாம்பல் சேர்ந்த வெள்ளை நிறமாகும். இதில் ஆங்காங்கே சொக்லேட் நிறமான புள்ளி கள் காணப்படும்.

இந்தப் புழுவின் பூரண வளர்ச்சி நீளம் 2 சென்ரி மீற்றர் ஆகும். வளர்ச்சியடைந்த பூச்சி 6-10 நாட்கள் உயிர்வாழும். இந்தப் பூச்சி கத்தரிச்செடிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்து வதில்லை. இந்தப் பூச்சிகள் பகல் நேரத்தில் கத்தரிச்செடியின் இலையின் அடியில், மறைந்திருந்து இரவு நேரத்தில் வெளியே வருகின் றன. ஒரு பெண் பூச்சி 200-250 முட்டைகளை ஒரே தட வையில் இடுகின்றது. இந்த முட்டைகளிலிருந்து கூட்டுப்புழு, புழு உருவாகிக் கத்தரியைத் தாக்குகின்றன.



### நோயை இனம் காணல்

கத்தரித் தண்டுகள், காய் களை ஓட்டையாக்கும் புழுவின், பாதிப்புக்குள்ளான கத்தரித் தணடு, வாடியிருப்பதனைக் காண லாம். வாடிய தண்டைப் பரி சோதித்துப் பார்த்தால், ஏதாவ தொரு இடத்தில் சிறிய புள்ளி போன்ற ஓட்டையைக் காண லாம். பாதிக்கப்பட்ட தண்டைப் பிளந்து பார்த்தால், அதனுள் ரோஸ் நிறப்புழு இருப்பதைக் காணலாம். இவ்வாறே பாதிக் கப்பட்ட காய்களிலும் தெளி வான ஓட்டை காணப்படும். இதனை வெட்டிப் பார்த்தால், கறுப்புநிறமான அழுக்குகளும் கூட்டுப்புழுவும் இருப்பதைக் காணலாம்.

பாதிப்பு ஏற்பட்ட கத்தரிச் செடியில் வளர்ச் சியடைந்த பெண் பூச்சி இடும் முட்டைகள் மூலம், அதன் அருகில் இருக்கும் கத்தரி பாதிக்கப்படலாம் அல்லது செழிப்பான கத் தரியில் அவை முட்டையிடுவதன்மூலம் பாதிப்பு ஏற்படலாம். முன்போகத்தில், கத்தரி உற்பத்தி செய்யப்பட்ட நிலங்களில் இருக் கும் புழு மண்கூடுகள் மூலமும் இவை பரவ ஆரம்பிக்கும்.

### நோயைத் தடுக்கும் முறை

இந்தப் புழுக்களை கிருமிநாசினி மட்டும் பயன்படுத்தி அழிக்கமுடியாது. பின்வரும் முறைகளையும் பயன்படுத்தி அழிக்கமுடியும்.

1. பாதிப்பின் ஆரம்பத்திலேயே அதா வது, தண்டுகள் வாடியதை அவதானிக்கும் பொழுதே, வாடிய இடத்துக்குக் கீழாக வெட்டி எடுத்து புதைத்துவிட வேண்டும். இதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

2. விளைச்சலைப் பெற்றவுடன், பாதிக் கப்பட்ட கத்தரிச் செடிகள் இருப்பின் அவற்றை எரித்தோ அல்லது கிடங்குவெட்டிப் புதைத் தோவிட வேண்டும்.

3. பயிரிடும் நிலத்தை, இரண்டு மீற்றர் உயரத்துக்குச் சுற்றி மறைத்துவிட வேண் டும். இதைச் சிறிய ஓட்டைகள் கொண்ட வலையினாலோ அல்லது வேறு ஏதாவ தொரு தடுப்பினாலோ உபயோகித்துத் தடுக் கலாம். இதனால், பாதிப்புக்களை 13 வீத மாகக் குறைத்துக் கொள்ளமுடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

4. கிருமிநாசினிமூலம் நோய்த்தடுப்பு முறை தேவையென்று கருதினால், பின்வரும் ஏதாவதொரு கிருமிநாசினி ஒன்றைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

1. காபரில் (செவின்) 30 கிராமை உபயோகித்து 10 லீற்றர் நீரில் கலந்து பாவிக்கலாம்.

2. காபரில் (செவின் SLR) 48% Sc கலந்து 25 மில்லி லீற்றர் நீர், 10 லீற்றர் கலந்து தெளிக்க வேண்டும்.

3. மெத்திரின் 25% Ec (அம்புஷ்) 3 மில்லி லீற்றர் நீரை 10 லீற்றர் கலந்து தெளிக்க வேண்டும்.

4. SF பென்வெலரேட் 75% Ec (சுமிசிடித் சுபர்) 25 மில்லி லீற்றரை, 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

5. F பென்வெலரேட் 20% Ec (சுமிபொன்) 10 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

சை.:.கபர் லுத்திரின் 5% Ec (பேத் றொயிட்) 8 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். டெல்ரா மெத்திரின் 2.5 (டெசிஸ்) 7 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்க வேண் டும்.

விளைச்சலைப் பெறுவதற்கு 7 நாட் களுக்கு முன்னர் கிருமிநாசினி பாவிப்பை நிறுத்தவேண்டும்.

காபரில் அடங்கிய கிருமி நாசினி தவிர்ந்த ஏனைய கிருமிநாசினி களைத் தேவையான சந்தர்ப்பத்தில், தகுந்த ஆலோ சனையுடன் கத்தரிச் செடிகளுக்குப் பாவித் தல் உகந்ததாகும்.

விளைச்சல் நிலத்தைச் சுத்தமாக வைத் திருப்பது மிக முக்கியம். விளைச்சலைப் பெற்றபின்னர், பாதிப்பு ஏற்பட்ட காய்களை எல்லா இடங்களிலும் போடாமல், ஒரு இடததில் 20 சென்ரி மீற்றர் ஆழமான கிடங்கு வெட்டி, அதனுள் போட்டு மூடிவிடவேண் டும்.

அத்துடன், கிருமிநாசினிகளை உபயோ கிக்க முன்னர், பாதிப்பு ஏற்பட்ட காய்கள், தண்டுகளை நீக்கியபின்னரே கிருமிநாசினி களைப் பயன்படுத்த வேண்டும்.

இதன் மூலம் சிறப்பான பலனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- சசி சந்திரகாசன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 25/= | 25/= | 40/= | 40/= | 20/= | 30/= | 30/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 30/= | 15/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 60/= | 60/= | 55/= | 60/= | 70/= | 70/ |
| கத்தரிக்காய் | 25/= | 25/= | 30/= | 25/= | 20/= | 35/= | 30/= |
| பாகற்காய் | 50/= | 40/= | 50/= | 60/= | 60/= | 60/= | 60/= |
| கரட் | 60/= | 70/= | 80/= | 65/= | 80/= | 70/= | 80/= |
| பீற்றூட் | 25/= | 30/= | 40/= | 35/= | 25/= | 40/= | 25/= |
| முருங்கைக்காய் | 50/= | 80/= | 100/= | 100/= | 80/= | 70/= | 80/= |
| வெங்காயம் | 20/= | 25/= | 30/= | 22/= | 30/= | 30/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 60/= | 60/= | 70/= | 60/= | 70/= | 60/= |






| | |
|---|---|
| நிறுவனம் | யுனிசெவ் |
| வெற்றிட மாகவுள்ள பதவிகள் | உதவி திட்ட அலுவலர். (மட்டக்களப்பு) |
| அடிப்படைத் தகுதி | சமூகவிஞ்ஞானம்/ அபிவிருத்தி சார்ந்த துறை அல்லது அவை சார்ந்தவைகளின் பட்டப்படிப்பு. |
| முடிவு திகதி | 05.08.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

செய்திக் கட்டுரை

- காவலூர் விஜேந்திரன்



# இல்லிடங்களைத் தொலைத்தவர்களின் இன்னல்கள் தீர்க்கப்படல் வேண்டும்

**மண் அணைகளும், முட்கம்பி வேலிகளும், காவ லரண்களுக்கு மத்தியில் இரா ணுவ முகாம்களுக் கென - எமது ஊரையும், உறைவிடங்களையும், உயில் எழுதிப் பெற்றது போல் வடக்கு - கிழக்குப் பகுதியில் பல இடங்களிலும் இராணுவம், பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வைத்துள்ளது.**

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தம் குடிமனைகளுக்கு அல்லது வழமையான இருப்பிடங்களுக்குத் தாமாகப் பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் திரும்பிச் செல்வதற்கு அல்லது நாட்டின் மற்றொரு பகுதியில் தாமாகக் குடியேறுவதற்கு வாய்ப்பான நிலைமைகளை உருவாக்குவதுடன், அதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்துவது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பிரதான கடமையும், பொறுப்புமாகும்.

இத்தகைய அதிகாரிகள் - உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தம் முன்னைய இடங்களுக்குத் திரும்பிச் சென்று மீளவும் குடியேறுவதற்கு அல்லது தமது பகுதிகளில் இணைந்து கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளையும், உரிய அமைப்புக்களும் அவை சார்பான அதிகாரிகளும் மேற்கொள்ளவேண்டுமென யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வெளியிட்ட, உள்நாட்டு இடம் பெயரந்தோர் தொடர்பான நெறிமுறைகளை உள்ளடக்கிய கைநூலின் நான்காவது பிரிவின் 28 ஆவது விதி எடுத்துரைக்கின்றது.

தெல்லிப்பளை, மாவை கலட்டி, கொல்லன் கலட்டி மக்கள் - பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பு அதனை ஒட்டிய இராணுவ நடவடிக்கைகளால், 1990 ஆம் இடம் பெயர்ந்து அளவெட்டி தெற்கு குருவளை காந்திஜீ நலன்புரி நிலையத்தில் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். தொடர்ந்து, 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து 1996 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அதே இடத்தில் அடிப்படை வசதிகள் அற்று தமது வாழ்வை நகர்த்தி வருகின்றனர்.

J/219 (J/225) கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட 77 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் வரையானவர்கள் - தகுதியான அமைவிடம், தண்ணீர், மின்சார வசதிகள் இன்றியும், கல்வி, சுகாதார வசதிகளைப் பூரணமாக நிறைவேற்ற முடியாமலும் கடந்த 14 வருடங்களாக இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்தகால இராணுவ வன்செயல்களினால் 11 பேர் இறந்ததுடன், 11 பேர் இராணுவ வடுக்களைத் தாங்கியவாறு ஊனமுற்றவர்களாக வலம் வருகின்றனர். பாடசாலை செல்லும் வயதில் பலர் இருந்த போதிலும் 60 மாணவர்களே இங்கிருந்து கல்வி கற்று வருகின்றார்கள்.

காந்திஜீ பாலர் பாடசாலை - கல்வி சார், கல்வி சாரா வளங்களின்றி 30 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. திருமதி அற்புதவதனி மகேந்திரம் - கடந்த பல வருடங்களாக ஆசிரியராக உள்ளார். பாலர் பாடசாலைகளுக்காவது உரியவர்கள் உதவிகளை வழங்கவேண்டும். ஒப்பீட்டு ரீதியில் பாதிப்படையும் இவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டாவது இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த நலன்புரி நிலையத்துக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வீடுகளை அமைத்துக் கொடுத்தது. 1996 ஆம் ஆண்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் கூரைத் தகடுகளை வழங்கி, இந்தக் குடியிருப்பாளர்களின் கூரைப்பிரச்சினையை நிவர்த்தி செய்தது. இவர்களுக்குத் தண்ணீர்ப்பிரச்சினையே பெரும் பிரச்சனையாக வுள்ளது.

அருகிலுள்ள கோயில் கிணற்றில் குடி தண்ணீரைப் பெற்று வருகின்றனர். வேறு தேவைகளுக்கான தண்ணீர் வயற் கிணறுகளில் இருந்தே பெற்று வருகின்றனர்.

வயல் சொந்தக்காரர்களின் அனுமதியுடன் கிணறுகளைப் புனரமைத்துப் பாவிக்கும்போது, இடையில் தடை விதிக்கப்படுகின்றது. இதனை மீறிப் பாவித்தால் வயல் உரிமையாளர்கள் கிணறுகளில் ஒயில், கிருமி நாசினிகளை ஊற்றி விடுகின்றனர்.

இதனால் அடிக்கடி தண்ணீர்ப்பிரச்சினை ஏற்படுவதுடன் தூர இடங்களுக்குத் தண்ணீர்த் தேவைக்காகச் செல்லவேண்டியுள்ளது. தனது 15 வயதில் இருந்து 14 வருடங்களாக இந்தக் குடியிருப்பில் வசித்து வரும் கூலித் தொழிலாளியான ராசன் உதயரஞ்சன் (வயது 29) தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார் -

பல போராட்டங்களை நடத்தி சொந்த இடத்திற்குப் போவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். பயன் ஏதும் இல்லை இறுதியாக சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டத்திலும் பங்கு கொண்டேன். இதுவரை சாதகமான பதில் ஏதும் கிடைக்கவில்லை இனியாவது எங்கட ஊருக்குப் போக விட்டால், நாங்கள் எங்களது சொந்த நிலத்தில் நிம்மதியாக எங்களது நிரந்தர வீடுகளில் வாழமுடியும். இது நடக்குமா என்ற ஏக்கத்துடனேயே இந்தப் பகுதி மக்கள் உள்ளனர். எங்களை எமது ஊருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைளில் இதுவரை யாரும் பொறுப்புடன் செயற்பட்டதாகவோ, செயற்படுத்துவதாகவோ தெரியவில்லை. உலர் உணவு நிவாரணங்கள் கூட ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஆரம்பத்தில் பல உதவி நிறுவனங்கள் எமக்கான உதவிகளை மேற்கொண்டன. இப்பொழுது அவற்றைக் காண முடியவில்லை.

என்னைப் பெறுத்தவரையில் எமக்கு உதவி அமைப்புக்களின் உதவிகளோ நிவாரணப் பொருட்களோ தேவையில்லை. எங்களை எங்கட இடங்களுக்குக் போக அனுமதிக்க வேண்டும். இதற்கு இனியாவது உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தனது உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்து கொண்டார உதயரஞ்சன்.

மின்சாரம், கல்வி, சுகாதார வசதிகள் இன்றி அல்லற்படும் மக்கள் தொற்று நோய்களுக்கும் அடிக்கடி இலக்காகி வருகின்றனர்.

இந்த நலன்புரி நிலையத்தில் இட நெருக்கடி அதிகரித்துள்ளமையும் நோய்கள் பரவுவதற்குக் காரணங்களாகின்றது. இங்கே சிறுவயதுத் திருமணங்கள் மற்றும் கலாசாரச் சீரிழிவுகள் இடம்பெறுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



இங்கு தொடர்ச்சியாகத் தென்னிந்தியத் திரைப்படங்களை குழுவாகச் சேர்ந்து பார்ப்பதாக அறியமுடிகிறது.

சுகாதாரம், சமாதானக் கல்வி, சேமிப்பு, சிறுவர் உளவியல் தொடர்பான பல வகையான பயிற்சிகளை மேற்கொண்டு வரும் கியூடெக் ஊக்குவிப்புச் செயற்திட்டத்தின் ஊக்குவிப்பாளராக - அளவெட்டி, இளவாலை, மாதகல் ஆகிய இடங்களில் பொறுப்புடன் சேவையாற்றிவரும் செல்வி றொபேட் ஏமி, இந்த நலன்புரி நிலையம் தொடர்பாக பகிர்ந்து கொண்டமை -

எமது செயற்பாடுகள், உதவி வழங்குவதில்லை. நாம் - சேமிப்பு, ஊக்குவிப்பு தொடர்பான ஆலோசனைகளையும், கல்வி சார் செயற்பாடுகளையுமே மேற்கொண்டு வருகின்றோம். இங்குள்ள மக்கள் மிகவும் நெருக்கமான அமைவிடங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இதனால், தொற்று வியாதிகள் அதிகமாக ஏற்படுகின்றன. சிறுவர்கள், பெரியவர்கள் எவரும் சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில்லை. பொதுவாகச் சொன்னால், எந்தவித அடிப்படை வசதியுமின்றியே வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு, சகல துறைகளிலும் நலத் திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டு - ஓரளவேனும் சமூக ஓட்டத்திற்கு ஏற்ற மாதிரி மாற்றவேண்டும். தனது குடும்பம் - வீடு - தொழில் என்ற சுற்று வட்டத்துக்குள்ளே வாழ்பவர்களாகவே இவர்களை அவதானிக்க முடிகின்றது என்றார்.

மண் அணைகளும், முட்கம்பி வேலிகளும், காவலரண்களுக்கு மத்தியில் இராணுவ முகாம்களுக்கென - எமது ஊரையும், உறைவிடங்களையும், உயில் எழுதிப் பெற்றது போல் வடக்கு - கிழக்குப் பகுதியில் பல இடங்களிலும் இராணுவம், பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வைத்துள்ளது. முற்றத்துத் தென்னைகளையும், வீட்டுக் கதவுகளையும், தளபாடங்களையும் காப்பரண்களில் பார்த்துக் கதிகலங்கும் இந்த மக்களுக்கு இன்னும் எத்தனை நாட்கள் தான் தேவை - சொந்த இடங்களுக்குப் போக....

கடந்த இரண்டு தசாப்த காலமாக இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ எட்டு லட்சம் (800 000) மக்கள் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்தவர்களாக, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய அண்மைய அறிக்கையின் படி , இதில் 5 லட்சத்து 40 ஆயிரம் மக்கள் இன்றும் மீளக் குடியமர்த்தப்படவோ அல்லது சொந்த இடங்களுக்குச் செல்லவோ இல்லை. இதன் காரணமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெரும்பாலான நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதனைவிட, பலர் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

விரும்பியோ விரும்பாமலோ தமது இல்லிடங்களைத் தொலைத்து, பல வகையான இன்னல்களை அனுபவித்து வரும் அளவெட்டி - குருவளை காந்திஜீ நலன்புரி நிலைய மக்களுக்கு விடிவு கிடைப்பது எப்போது?

சொந்த நிலங்களில் தமது சொத்துக்களைக் கையாள - தெற்கிலிருந்து வந்தவர்களே இந்த மக்களுக்கு அனுமதி தர வேண்டும். வறண்டு வனாந்தரமாய்ப் போயுள்ள வலிகாமம் எப்பொழுது வனப்புடன் காட்சி தரும்? இதற்கு இன்னும் எத்தனை நாட்கள் தேவை? ☆

ஒரு நிமிடம் சிந்திப்போம்

# வாழ்க்கையில் உயர நம்பிக்கை அவசியம்

வாழ்க்கையில் உயர் நிலையில் இருப்பவர்கள் எல்லோரும் தம்மீது நம்பிக்கை கொண்டவர்கள், அதனால் வாழ்வில் வெற்றி பெற்றார்கள்.

நம்பிக்கை என்பது ஒரு மனிதனுக்குள் இருக்க வேண்டிய ஊக்க மாத்திரை. இது மனிதனை ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகின்றது.

நாம் பல்வேறு துறைகளில் ஈடுபடுபவர்களாக இருக்கலாம் அல்லது பல்வேறு இலக்குகளை முன்வைத்து அதற்காக முயற்சிப்பவர்களாக இருக்கலாம். இவ்வாறு முன்னெடுத்துச் செல்லும்போது, பல்வேறுபட்ட தடைகள் ஏற்படும். இது தவிர்க்கமுடியாதது. இதைக்கண்டு ஒதுங்கி, வாழ்வே வெறுத்தது போல் சோர்ந்து போதல் நல்வாழ்வல்ல.

எமது வாழ்வில் ஒரு படி ஏற இரண்டுபடி சறுக்குவது போல, தோல்விகள் வந்து கொண்டே இருக்கும். இவை ஒவ்வொன்றும் எமக்குப் பாடம் கற்பிக்கும் ஒன்றாகவே இருக்கிறது. இத்தகைய தோல்விகளைக் கண்டு நம்பிக்கையிழந்து கொண்டால், குறித்த இலக்கினை அடையவும் முடியாது வாழ்வில் வெற்றி காணவும் முடியாது.

*'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே*
*வாழ்வென்றால் போராடும் போர்க்களமே!*
*ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே*
*இரவானால் பகலொன்று வந்திடுமே!*

*நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்*
*இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில்*

*மனமே ஓ... மனமே நீ மாறிவிடு!*
*மலையோ அது பனியோ நீ மோதிவிடு!*

*உள்ளம் என்றும் எப்போதும்*
*உடைந்து போகக் கூடாது.*
*என்ன இந்த வாழ்க்கையென்ற*
*எண்ணம் தோன்றக் கூடாது.*
*எந்த மனிதன் நெஞ்சுக்குள்*
*காயம் இல்லை சொல்லுங்கள்?*
*காலப் போக்கில் காயம் எல்லாம்*
*மறந்து போகும் மாயங்கள்*

*உளிதாங்கும் கற்கள் தானே*
*மண்மீது சிலையாகும்*
*வலிதாங்கும் உள்ளம் தான்*
*நிலையான சுகம் காணும்*

*யாருக்கில்லைப் போராட்டம்?*
*கண்ணில் என்ன நீரோட்டம்?*
*ஒரு கனவு கண்டால்*
*அதை தினம் முயன்றால்*
*ஓர் நாளில் நிஜமாகும்*

*வாழ்க்கைக் கவிதை வாசிப்போம்*
*வானம் அளவும் யோசிப்போம்*
*முயற்சி என்ற ஒன்றை மட்டும்*
*மூச்சுப்போல சுவாசிப்போம்*

*இலட்சம் கனவு கண்ணோடு*
*இலட்சியங்கள் நெஞ்சோடு*
*உன்னை வெல்ல யாரும் இல்லை*
*உறுதியோடு போராடு!*
*மனிதா! உன் மனதைக் கீறி*
*விதைபோடு மரமாகும்*
*அவமானம் படுதோல்வி*
*எல்லாமே உரமாகும்*
*தோல்வியின்றி வரலாறா?*
*துக்கம் என்ன என் தோழா?*

*ஒரு முடிவிருந்தால் அதில் தெளிவிருந்தால்*
*அந்த வானம் வசமாகும்!'*

இந்தச் சினிமாப் பாடற் கருத்துக்கள் வாழ்வுக்கு உரமூட்டுவதாக அமைகின்றன.

தோல்விகள் ஒவ்வொன்றினாலும் துன்பங்கள் வரும். அவைதான் வாழ்க்கை என்று நம்பினால், வாழ்கையின் கண்ணும் அதிக துன்பத்தை அனுபவிக்க வேண்டி ஏற்படும். எப்போதும் நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தோல்வியைக் குறித்து, தினமும் சிந்தித்து வாழ்வை நரகமாக்காது அத்தோல்வி ஏன் வந்தது என்று மீள்பார்வை செய்து அதற்குத் தீர்வு காண முயலவேண்டும்.

நம்பிக்கையுள்ள இதயம் மகிழ்ச்சி கொள்ளும். இதனால் உடலும் ஆரோக்கியமாக இருக்கும். நம்பிக்கை இழந்த இதயம் துன்பத்தில் மூழ்கி, எல்லாம் வெறுத்தது போன்ற ஓர் வெறுமை நிலையை உணர்கிறது. இந்த வெறுமை நிலை உடற் சோர்வைக் கொண்டு வரும். இது பல நோய்கள் உருவாகவும் காரணமாக அமைகிறது.

மகிழ்சியாகவும் - நம்பிக்கையாகவும் இருப்பது இன்பகரமானது. அதனால் கவலையும், அழுத்தமும் மிகக் குறைவாகவே ஏற்படுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் உடல் செழித்தோங்குகிறது. ஆகவே, ஆரோக்கியத்திற்காக மனிதன் செய்யக் கூடிய மற்றொரு செயல் நம்பிக்கையோடு இருப்பதாகும். இவை நரம்பியல் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள்.

ஆகவே, மனமகிழ்ச்சி கொண்டு வாழ்வதற்கு நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை எத்தோல்வி வந்தாலும் ஆட்டம் காணாது திடமாக இருக்க வழிவகுக்கும். சிந்திப்போம்..... செயற்படுவோம்...!

- யாழ். ராதவல்லி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்.*

திருக்குறள

# நமது நோக்கு

## புதிய இராகத்தில் பழையபாடல்

பழையபடி மாமியார் கழுதைபோலானாராம் எனத் தமிழில் பழமொழியொன்று உண்டு.

எதற்காக அந்தப் பழமொழியை மூதாதையர் மொழிந்தார்கள என்பதற்குப் பல்வேறு கர்ணபரம்பரைக்கதைகளை உதாரணமாகக் கூறுவார்கள். அந்தக் கதைகளில் நகைச்சுவையுணர்வு மேலோங்கி இருந்தாலும், அதனூடே ஒரு ஆழமான அர்த்தமும்இழையோடுவதை உன்னிப்பாகக் கவனித்தால் புரிந்துகொள்ள முடியும்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் நோர்வே பிரதிவெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் பேசும்போது கூறியதாக வெளிவந்துள்ள தகவல்கள் மேற்படி பழமொழியை நினைவூட்டவே செய்தது. அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான நிபந்தனையற்ற முறையில் புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தை இரண்டாண்டுகள் நீடித்தபோதும், பின்னர் இடையே ஒரு தேக்கநிலையை அடையப் பல்வேறு பிரச்சினைகள் காரணமாயிற்று. எனினும், அதனைத் தொடர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

விடுதலைப் புலிகள் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபை, ரணில் தலைமையிலான அரசிடம் கையளித்ததையடுத்து உடனடியாக இரவோடு இரவாக வந்த அரசைக் கலைத்து புதிய தேர்தலுக்கான நாளைக் குறித்த அறிவிப்பையும் வெளியிட்டதையடுத்து சமாதான முயற்சிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்ததுடன், அதன் எதிர்காலமும் கேள்விக்குறியாகியது.

தேர்தல் முடிவு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த ஆட்சிப் பொறுப்பினைச் சமாதான முயற்சிகளை, முற்றாக எதிர்த்து வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்றதையடுத்து நிலைமை முற்றிலும் மாறி சமாதானச்சூழல் படிப்படியாக குழம்பும் நிலை ஏற்பட்டு இன்று அது முற்றாகவே உடையும் அபாயம் உருவாகியுள்ளது.

ஜனாதிபதி சமாதானத்தை முன்னெடுக்க விரும்புவதாகக் கூறிக்கொண்டாலும், அவரால் அதற்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கமுடியாமல் இருப்பதுடன், அதற்குப் பாதகமான சூழல் விஸ்தாரம் கொண்டுவரும் ஆபத்தைத் தடுக்கமுடியாமலும் உள்ளது.

இந்தப் பகுதியில் பல தடவைகள் எழுதப்பட்டதுபோல் ஜனாதிபதி சமாதானத்தை உதட்டளவில் உச்சரிக்கும் ஒருவராகவே உள்ளார். 'பேச்சுப் பல்லக்கு தங்கச்சி கால்நடை' என்பதுபோல் ஜனாதிபதியின் சமாதான நாடகம் காலம் கடத்தி இழுத்தடித்து ஏமாற்றும் 'கரு'வை மையமாகக்கொண்டது என்பது இப்போது மிகவும் தெளிவாக உள்ளது.

நேற்று முன்தினம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து ஆராய வருகை தந்த ஹெல்கிசனிடம், பொறுமையைச் சோதிக்கும் ஜனாதிபதியின் செயற்பாடுகளால் தமிழ் மக்களுக்கு சமாதானம் குறித்த நம்பிக்கையுடனான எதிர்பார்ப்பு முற்றிலும் சிதைவடைந்து விட்டதை அரசியற்துறைப்பொறுப்பாளர் விளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இந்த நிலையை விளக்கிய ஹெல்கிசனிடம் - ஜனாதிபதி விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் பிரகாரம் இடைககால நிர்வாகம் தொடர்பான விடயத்தில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயார் எனக்கூறியதாக செய்திகள் வெளியாகின.

ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்கமைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகள் தயார் என்றால், இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்துப் பேசத் தாமும் தயார் என ஜனாதிபதி கூறியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இருப்பினும், அதனைத் தொடர்ந்து வெளியான தகவல்கள் இரண்டாயிரம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி முன்வைத்த அதிகாரப்பரவலாக்கல் தீர்வுயோசனைப் பொதியின் அடிப்படையில் இறுதித் தீர்வு குறித்துப்பேச சம்மதித்தாலேயே, இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது குறித்து யோசிக்கலாம் என்று ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறின.

அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப் பொதி என்பது, தற்போதைய பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகமுன்னர், சந்திரிகா அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டு விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

அதனையே தூசு தட்டி, மெருகூட்டி மீண்டும் முன்வைக்க ஜனாதிபதி முயல்வது, இத்தனை நாள் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு முயற்சிகளை நிராகரிப்பதுடன், எதிர்கால சமாதான நகர்வுகளுக்கு நிரந்தர முட்டுக்கட்டையையும் போடுவதாக உள்ளது.

இது எந்தவகையிலும், சாத்தியமாகக்கூடியதொன்றல்ல என்பதை இறுக்கமாகக் கூறியேயாகவேண்டும்.

இடைக்கால நிர்வாகம் என்பது, மக்களின் இயல்புவாழ்வு மீள உருவாக்கப்படுவதற்குவேண்டிய ஒரு கட்டமைப்பேயாகும்.

இறுதித்தீர்வு என்பது தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பான விடயமாகும். இரண்டும் வேறுவேறு பிரச்சினைகள் என்பதை சமாதானத்தை விரும்பும் சக்திகள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இடைக்கால நிர்வாகம் என்பது, ஒரு தற்காலிக சபையால் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசயப் பணிகளை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த உதவும் ஒரு அமைப்பு. இறுதித்தீர்வு குறித்த பேச்சுக்களை நம்பிக்கையுடன் ஆரம்பிக்க இது ஒரு அடித்தளமாகவே அமையும். அவ்வளவுதான்.

ஆனால், இதனையே தமிழீழத்துக்கான பாதை எனப் பிரசாரம செய்துவரும் அரசு - அதனை வழங்க நிபந்தனைகளை விதிப்பதானது இறுதித்தீர்வு என்ற பாரிய விடயம் குறித்துப் பேசுவதற்கு எந்தக் காலத்திலும் முன்வரப்போவது கிடையாது என்ற உண்மையையே உணர்த்தியிருக்கிறது.

## நாடும் நடப்பும்




# சத்தியக்கூற்றுப் படிவங்கள் கட்டம் கட்டமாகவே அனுப்பப்படும்

வேலையற்ற பட்டதாரிகளை அரசதுறைகளில் வேலைக்கமர்த்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக, திறைசேரியினால் பட்டதாரிகளுக்கு அனுப்பப்பட்டுவரும் சத்தியப் பிரமாண விண்ணப்பப் படிவங்கள் - கட்டம் கட்டமாகவே அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு இந்த விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்களை 27.07.2004 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி, அனுப்பிவைக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பதால், இந்த விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுவரையில் சத்தியப்பிரமாண விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாத பட்டதாரிகள் பலர் - பிரதேச செயலங்களை மற்றும் அஞ்சல் அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஆனால், இந்த விண்ணப்பப் படிவங்கள் திறைசேரியால் நேரடியாகவே பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் சில பட்டதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சத்தியப் பிரமாண விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி அனுப்ப வேண்டிய திகதி 01.08.2004 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பட்டதாரிகள் இது குறித்து அச்சம் அடையத் தேவையில்லை என்றும், அனைவருக்கும் இந்த விண்ணப்பப் படிவங்ககள் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த புதிய நடவடிக்கை

குடாநாட்டு மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கில் செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உலக வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில அறிவின் தரத்தை அறியும் பொருட்டு அவர்களிடையே பரீட்சை ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம், கலைப்பீடம், விஞ்ஞானபீடம், வணிக, முகாமைத்துவ பீடம், விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் வவுனியா வளாகம் ஆகியவற்றிலிருந்து இந்தச் செயற்திட்டத்திற்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவின் தராதரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, ஓகஸ்ட் 3 ஆம் திகதி பரீட்சை ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை வினாத்தாள்கள் லண்டனுக்கு அனுப்பப்பட்டுத் திருத்தப்படவுள்ளதாகவும், இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் - தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வெடிகுண்டுகளை கண்டுபிடிக்க முப்பது மோப்ப நாய்கள்

வெடிகுண்டுகள் மற்றும் போதைவஸ்துக்களைக் கண்டுபிடிப்பதற்காக, 30 மோப்ப நாய்களை வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் விஷேட தேவைகளுக்காகவே இந்த மோப்ப நாய்கள் வரவழைக்கப்படவுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள பொலிஸ் சேவைத் திணைக்களங்களினூடாகவே இவைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதால், அதன்பொருட்டு பொலிஸ் திணைக்களத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் ஜேர்மனி பொலிஸ் திணைக்களத்தால், ஹெபாட் இன நாய்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருந்தன. (தே)

## பளை அரசினர் வைத்தியசாலையில் போதிய வைத்தியர்களை நியமிக்கவும்

### சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை

பச்சிலைப்பள்ளி - பளை அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர மருத்துவர் இல்லாததாலும், இங்கு கடமையாற்றும் ஒரே ஒரு மருத்துவர் விடுமுறையில் செல்லும் வேளையிலும் இங்கு மருந்து பெறவரும் நோயாளர்கள் மருந்து பெறமுடியாமல் வீடுதிரும்புவது குறித்தும் பளைப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

யுத்த அனர்த்தங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட பளை பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் - மீளக்குடியமர்ந்த பின்னும், அபிவிருத்திப் பணிகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுவரும் வேளையில், இந்த மருத்துவமனை அபிவிருத்திக்குப் போதிய கவனம் செலுத்தப்படாமலுள்ளது.

பளை அரசினர் வைத்தியசாலை மருத்துவர் விடுமுறையில் செலலும்போது அதற்குப் பதில்கடமையாக ஒரு மருத்துவரை நியமிக்குமாறு, யாழ். சுகாதார பிரதிப் பணிப்பாளருக்கு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

# அறநெறிப் பாடசாலைகளின் மேற்பிரிவு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கென, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இறுதிப் பரீட்சை - நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று பதினொராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும், ஏற்கனவே இந்தப் பரீட்சையில் தோற்றி சித்தி எய்தாதவர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றமுடியும். அத்துடன், பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாகவே இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப்படிவம் கிடைக்காத அல்லது 2003 ஆம் ஆண்டு பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத அறநெறிப் பாடசாலையாயின் - பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை என்பவற்றைக் குறிப்பிட்டு, இந்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பி வைத்த எல்லா அறநெறிப்பாடசாலைகளுக்கும், பரீட்சைத்திணைக்களத்தின் மூலம் விண்ணப்பப் படிவங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியாகும்.

பரீட்சை தொடர்பான விபரங்கள் அனைத்தும் ஜுலை மாதம 16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர்களும், அதிபர்களும் ஊக்கமெடு[illegible] - மாணவர்களை இந்தப் பரீட்சைக்கு தோற்றச் செய்யுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

தமிழியல் கட்டுரை

பகுதி 1

# தமிழ் செம்மொழியாகும் தருணத்தில் தமிழின் இன்றையநிலை என்ன...?

இரா.வெங்கடாசலபதி

**தமிழ் செம்மொழி ஆகும் தருணத்தில்.... தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும் என்று, ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசின் குறைந்தபட்சப் பொதுக்கூட்டம் உறுதிய ளித்துள்ளது. மிகத்தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழுக்குக் காலம் கடந்து கிடைக்கவிருக்கும் இந்த அங்கீகாரத்தின் பொருள் என்ன? கல்வித்துறையிலும் பிற அறிவுத்துறைகளிலும் தமிழின் தற்போதைய நிலை என்ன? தமிழகம் மற்றும் உலகளாவிய தளத்தில் தமிழியல் துறையில் நடைபெற்றுவரும், நடைபெறவேண்டிய பணிகள் என்னென்ன?**

**இந்தக் கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சிகள் இந்தச் சிறப்புப் பகுதியில் பதிவு பெறுகின்றன. தமிழ் செமமொழியாகும் தருணத்தில் தமிழின் இன்றைய நிலை குறித்த விவாதத்தைத் தூண்டும் முகமாக இந்தப் பகுதி வெளியாகின்றது.**

பதினாறு நாடுகளைச் சேர்ந்த நாற்பது அறிஞர்கள் எழுதிய, பெரிதும் தமிழியல் சார்ந்த கட்டுரைகள் அடங்கிய **South - Indian Horizons** என்ற நூல், பிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞர் - பிரான்சுவா குரோ 70 ஆம் பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாக அண்மையில் வெளிவந்துள்ளது. கட்டுரை வழங்கியவர்களில் இருபத்தைந்து பேரேனும் தமிழரல்லாதவர்கள்.

தமிழ் செம்மொழியாக இந்திய அரசால் அங்கீகரிக்கப்படவுள்ள நிலையில், உலக அளவில் தமிழியல் ஆய்வு பெற்றுள்ள இடத்தை மதிப்பிட இது ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும்.

ஒரு வகையில் செம்மொழி அந்தஸ்து புலமை உலகில் தமிழுக்கு எப்பொழுதோ கிடைத்துவிட்டது. பிரன்சுவா குரோ மலர் போன்ற நூல்கள் ஒரு சோற்றுப் பதம். உலகின் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் பல காலமாகவே பயிற்றுவிக்கப்பட்டும், பயிலப்பட்டும் வருகின்றது. தமிழைச் செம்மொழியாக இந்திய அரசு அறிவிப்பதால் உலக அளவில் தமிழுக்குப் பெருமை கிடைக்கும் என்று பொதுவாக நம்பப்படும் சூழ்நிலையில், உலக அளவில் தமிழியல் ஆய்வின் நிலையை அறிமுகப்படுத்துவதும், மதிப்பிடுவதுமே இங்கு என் நோக்கம்.

மேற்குலகு, தமிழை அறியவும், ஆராயவும் தொடங்கி நாலரை நூற்றாண்டுகளாகிவிட்டன. கிறிஸ்தவ சமயப் பணியின் மூலமாகத் தொடங்கிய இந்த உறவு அச்சு நூல்களும், அதிகாரிகளும் புதிய முறை இலக்கணங்களும் உருவாக வழி செய்தது. காலனியாதிக்கம் வேரூன்றத் தொடங்கிய கட்டத்தில், பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலிருந்து வெள்ளை நிர்வாகிகளும் இதில் பங்கெடுக்கலாயினர். மொழிசார்ந்த பனுவல்கள் மட்டுமல்லாமல், சமூகம், பொருளாதாரம், வரலாறு முதலானவை தொடர்பான நூல்களும் எழுதப்பட்டன. என்ரி என்ரிக்ஸ், பெஸ்கி என்ற வீரமாமுனிவர், இராபர்ட் டி நோபி, சீகன் பால்க், பெப்ரீசியவு, கால்டு, வெல், ஜி.யு. போப் என்று தமிழுக்குப் பணியாற்றிய மேலைக் கிறித்தவப் பணியாளர் பட்டியலுக்குக் காசின் மெக்கன்சி, எல்லீஸ், மக்சின், பெர்சி மெக்வீன், எட்கர்தர்ஸ்டன் என்று வெள்ளை அதிகாரிகள் பட்டியலும் குறையாதது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை தமிழுக்குப் பணியாற்றிய மேலைத் தமிழ் அறிஞர் பற்றித் தமிழ் உலகம் ஓரளவு அறியும். காலணி ஆதிக்கத்துக்குப் பிந்தியநிலை என்ன?

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் கணிசமான அளவிலும், சோவியத் ஒன்றியம், செக்கஸ்லோவகியா ஆகிய நாடுகளில் சிறிய அளவிலும், பின் காலணியக் காலத்திலும் தமிழியல் ஆய்வு தொடர்ந்தது. இதில் முக்கிய மாற்றம் அமெரிக்காவின் நுழைவோடு ஏற்பட்டது.

இரண்டாம் உலகப்போர் முடிந்து தனிப்போர் தொடங்கிய காலப் பகுதியில் புவி முழுவதையும் பற்றிய அறிவைத் திரட்டிக் கொள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் விளைந்தது. **Area Studies** என்ற புதிய அறிவுத்துறை இதனால் தோற்றம் பெற்றது. அமெரிக்க மாணவர்கள் உலகின் இண்டு இடுக்குகளை எல்லாம் ஆராயத்தொடங்கினர். (சிகாகோ பல்கலைக்கழக மானிடவியல் துறைக்கட்டடத்தில் நுழைந்ததும் அந்தத் துறை மாணவர்கள் ஆராய்ச்சி செய்த பகுதிகள் வண்ண வண்ணக் குண்டு மணிகளால் அடையாளப்படுத்தப்பட்ட பெரிய உலக வரைபடம் வரவேற்கும் அதிகாரத்திற்கும் அறிவுக்கும் இடையிலான உறவின் வீச்சைக் காட்சிப் படுத்தும் இந்த வரைபடம் மலைப்பைத் தருவது) வரலாறு, சமூகவியல், மானிடவியல், அரசியல் விஞ்ஞானம் எனப் பல்வேறு துறையினரும் இதில் பங்கெடுத்த பொழுதும், இவர்களது ஆய்வுக்கு மொழிப் பயிற்சி இன்றியமையாததாக இருந்தது. மொழியியல் என்ற துறை உலககெங்கும் வளர்வதற்கு அமெரிக்கா நிதியுதவி செய்தது. இந்தியாவிலும் கூட மொழியியலுக்கான கோடைப்பள்ளிகளும், துறைகளும் உருவாக்கப்பட்டன. (மொழியியல் ஓய்ந்தபிறகு 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து நாட்டார் வழக்காற்றியல் கவனம் பெற்றது.)

மொழி - இலக்கியப் படிப்பாக மட்டும் இல்லாமல், தமிழ்ச் சமூகத்தின் பல கூறுகளையும் பல்வேறு அறிவுத்துறைகள் சார்ந்து அறியத் தலைபட்ட வேளையில், தமிழ் ஆய்வு என்பது தமிழியல் ஆய்வாக விரிவு பெற்றது. அது காலம்வரை மொத்த இந்தியாவைப் பற்றிய ஆய்வுகள் இந்தியவியல் என்ற பெயரில் பெரிதும் சமஸ்கிருதம் சார்ந்து நடைபெற்று வந்தவேளையில், தமிழின் தனியிடம் உணரப் படலான அறிவுத்திருப்பத்தையும் இந்தப் பெயர்மாற்றம் சுட்டுகின்றது. தமிழகத்தின் பல்வேறு சாதிகள் அரசியல், இயக்கங்கள், பண்பாட்டு மாற்றங்கள், குலமுறை முதலானவை பற்றிய ஆய்வேடுகளும், நூல்களும், கட்டுரைகளும் பல்கிப் பெருகின. இதனை அவதானித்து தமிழியல் என்ற துறைக்கு நிறுவன வடிவம் கொடுக்கத் தலைப்பட்டவர் தனிநாயக அடிகள். ஈழத்தவரான தனிநாயகம் அடிகள் தமிழகத்துடன் தொடர்புகொண்டிருந்தவர் என்பதோடு, மலேசியாவில் பேராசிரியராகப் பணியாற்றினார். கிறிஸ்தவ பாதிரி என்ற முறையிலும் உலகின் பல பகுதிகளைக் கண்டவராக இருந்தார். இவருடைய பரந்த பார்வைக்கும், தொலைநோக்குக்கும் **Tamil Culture** என்ற பெயரில் 1952 ஆம் ஆண்டில் அவர் தொடங்கிய ஆய்விதழ் சிறந்த உதாரணம். உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழியல் அறிஞர்களின் ஆய்வுப் பரிமாற்றத்திற்கான களமாக **Tamil Culture** விளங்கியது. (இதனை அடியொற்றியே உலகத் தமிழாராச்சி நிறுவனத்தின் **Journal Tamil Studies** தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் **Tamil Cibilization** முதலான இதழ்கள் தொடங்கப்பட்டன) **Tamil Culture** ஏற்படுத்திய தொடர்புகளே **International Association of Tamil Research (IATR)** தோன்றுவதற்கும், அதன் மூலம் உலகத்தமிழ் மாநாடுகள் நடைபெறுவதற்கும் வழி வகுத்தன.

இந்தக் காலப்பகுதியில் உலகத் தமிழியலாளரிடையே நீடித்த தொடர்புகள் இருந்தன. செக் நாட்டுக் கமில் சுவெலபில் பற்றிய ஒரு மயக்கம் தமிழ் நாட்டு அறிஞர்களிடம் அப்பொழுது இருந்தது. (முக்கியமாக இடது சாரிகள் இவரைக் கொண்டாடினர். 1968 ஆம் ஆண்டுக்குப் பிறகு அது மறைந்தே போனது) மயிலைசீனி வேங்கடசாமி அவருக்குத் தம் நூலை காணிக்கை ஆக்கினார் என்றால் கமில் சுவெலபில் மயிலைசீனியின் பாராட்டுக் கடிதத்தை தம் நூலுக்கு அணியாகச் சேர்த்துக் கொண்ட தோடு, மே.வீ.வேணுகோபாலபிள்ளைக்கு தம் நூல் ஒன்றையும் காணிக்கையாக்கினார்.

தமிழியலின் உலக விரிவில் தெ.பொ.மீக்கும் முக்கிய பங்கு இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையை நிறுவிய தெ.பொ. மீக்கு சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்சியை தொடங்கி வைத்த பெருமையும் உண்டு. மேலும், உலக அறிஞரிடையே சரிசமமாகக் கருத்துப் பாமாற்றத்தை நிகழ்த்தும் புலமையும் அவரிடம் இருந்தது.

இந்தக் காலப்பகுதியில் சில முக்கியமான கருவி நூல்கள், பன்னாட்டுத் தமிழியல் அறிஞர் கூட்டுறவால் வெளிவந்தன.

ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் தோமஸ்பரோ, கலிபோர்னியா பேராசிரியர் எம்.பி.எமனோ ஆகியோர் இணைந்து உருவாக்கிய திராவிடச் சொற்பிறப்பியல் அகர முதல என்ற சுருக்கம் தமிழ்ப் புலமையுலகில் புகழ் பெற்றது).

புதுச்சேரி, பிரெஞ் நிறுவனம் மூலம் நீ.கந்தசாமிப்பிள்ளை வெளியிட்ட சங்க இலக்கியச் சொல்லடைவு, ஜப்பான் நாட்டு நொபோரு கராஷிமாவுடன் இணைந்து ஏ.சுப்பராயலு வெளியிட்ட கல்வெட்டு அடைவுகள் ஆகியவற்றை முக்கியமாகச் சொல்லலாம். இந்தப் பெரும் பணிகள் உலக அளவிலான அறிஞர் கூட்டுறவின்றிச் சாத்தியமில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

1970 ஆம் ஆண்டுகளில் இருந்து தமிழகக் கல்வியில் சமூக அறிவியல் துறைகளில் ஏற்பட்ட சீரழிவும், தமிழ்த்துறைகளின் பலவீனங்களும் தமிழியல் உலகில் அயல் நாட்டுத் தமிழியல் அறிஞர்களுக்கும், தமிழக அறிஞர்களுக்கும் இடையே சமச்சீரற்ற நிலையை உண்டாக்கிவிட்டன.

அறிவுத்துறையில் அன்றாடம் தோன்றியும், மெருகேறியும் வந்த கோட்பாடுகளில் பயிற்சியும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் படிப்பும், பிற அறிவுத்துறை சார்ந்த அறிமுகமும் மேலைத் தமிழ் அறிஞர்களிடம் புலப்பட - தமிழகக் கல்வி நிறுவனங்களில் இவை முயற்கொம்பாயின. எட்வர்ட் சயித்யின் மேலைக் கல்வித்துறையில் புயலைக்கிளப்பி, நிலைப்பாடுகளை மறுபரிசீலணை செய்யவேண்டிய கட்டாயம் உருவான பொழுது, தமிழ்ப் பல்கலைக் கழகம் எட்கர் தர்ஸ்டனின் 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' நூற் தொகுதிகளை விசுவாசமாக மொழி பெயர்த்துக்கொண்டிருந்தது.

அதேவேளையில் - மேற்குலகில் தமிழ்ச் சமூகத்தின் வெவ்வேறு கூறுகள் விரிவான ஆய்வுக்கு உள்ளாகிவந்தன. வெறும் மொழி பெயர்ப்பு என்று எடுத்துக் கொண்டால் கூட சங்க இலக்கியம் முதல் சிலப்பதிகாரம், திவ்வியப்பிரபந்தம் தேவாரம், இறையனார் அகப்பொருள் எனப் பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளியாகின.

நம் இலக்கியத்தை அயல் நாட்டார் மொழி பெயர்த்தவிட்டார்கள் என்ற வெற்றிப்பெருமை பாராட்டால் கூட நாளடைவில் அறியாமை - மெத்தனம் என்று கட்டெறும்பாய்த் தேய்ந்தது. இதில் முரண் நகையாக கல்விப்பு லத்துக்கு வெளியே இவை பற்றிய அறிமுகம் ஓரளவிற்கேனும் இருந்தது. பர்ட்டன் ஸ்டெய்னின் சோழர்காலம் பற்றிய ஆய்வுகள் வரலாற்றுத்துறையை விட தமிழ்ச் சிற்றிதழ்களில் அதிகமாக பேசப்பட்டமை இப்பின்னணியில் கவனிக்கத்தக்கது.

இந்த நிலையின் மறுபுடையாக உலகத் தமிழ் மாநாடு அரசியலோடு பிரிக்க முடியாத நிலையை எட்டிவிட்டது. மலேசியாவிலும், பாரிஸிலும் நடந்த மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக விளங்க, யாழ்ப்பாண மாநாடு சிங்களப் பேரினவாத அரசின் வன்முறைக்கு இலக்காகி, துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. தமிழ் நாட்டில் நடந்த மாநாடுகளில் அரசியலே முன்னின்றது.

பண்பாட்டு முக்கியத்து வம் வாய்ந்த உலகத்தமிழ் மாநாடு போன்ற தொரு நிகழ்வு அரசியலோடு பொது மக்களின் பங்குபற்றலோடுமே நிகழ இயலுமென்றாலும், தமிழியல் ஆய்வு பெரிதும் பின்னகர்ந்து விட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

(தொடரும்)

---

ஜூலைப்பதிவுகள்....

மெல்பேர்ணிலிருந்து சபேசன்




# மனிதகுலத்தின் சாதனையையும் வேதனையையும் பதிவு செய்துள்ள ஜூலை 20

ஜூலை மாதம் 20 ஆம் திகதி உலக வரலாற்றிலேயே மறக்க முடியாத நாளாகும். ஆமாம் 35 ஆண்டுகளுக்கு முன்னால் - அதாவது, 1969 ஆம் ஆண்டு மனிதன் முதன் முதலாக சந்திரனில் காலடி எடுத்து வைத்த நாள் ஜூலை இருபதாம் திகதியாகும். எதையும் அறிந்து உணரவேண்டும் என்ற ஆர்வமும், அறிவும், துணிச்சலும் ஒன்று சேர்ந்து - அதன் விலையாக சமூகப் பிராணியான மனிதன் தனது பூமிப்பந்தை விட்டுப் புறப்பட்டு, முதன்முதலாக - தனக்கு அருகில் உள்ள துணைக்கோளான சந்திரனை அடைந்த நாள். விஞ்ஞானரீதியாகவும் - அறிவு ரீதியாகவும் மனித வரலாற்றில் இடம் பெற்ற நாள்.

ஜூலைத் திங்கள் 20 ஆம் திகதி 1969 ஆம் ஆண்டு. அன்று அந்த மகத்தான சாதனை நடைபெற்றபோது, மானுடக்குலமே ஒன்று சேர்ந்து வியந்து, குதூக லித்தது, கும்மாளமிட்டது. மனிதன் தன் பேதங்களை சற்று மறந்து - உலகமனிதனாக - வேற்றுக் கிரகத்திற்கு விஜயம் செய்த நிகழ்ச்சி. மனித குலத்தை ஒருங்கிணைத்து பிரதிநிதித்துவப் படுத்தியதாகவே கருதப்பட்டது. ஆனால், இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த பிரதிநிதித்துவம், பின்னால் பேணப்பட்டதா? இல்லை, அந்தச் சிந்தனைதான் வளர்வதற்கு இடம் கொடுக்கப்பட்டதா? இல்லை, இல்லவே இல்லை. மாறாக, மனித குலத்திலேயே, ஓர் இனம், இன்னொரு இனத்தை அடிமைப்படுத்தவும், அடக்கி ஒடுக்கவும் முனைகின்ற செயல்கள் அதிகரித்து வருவதைத்தான் நாம் காணமுடிகிறது.

ஈழத்தமிழ் இனத்தைப் பொறுத்த வரையிலும் கூட, இந்த ஜூலை இருபதாம் திகதி, மறக்க முடியாத நாளாக அமைந்து விட்டது. ஆனால், துரதிஷ்டவச மாக அது மறக்கப்பட வேண்டிய நாளாகவும் விளங்குகிறது. ஆமாம், உலக ஒற்றமையை விளக்கிக் காட்டும் வகையில் மனிதன் சந்திரனில் காலடி வைத்துப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் - அதே ஜூலை 20 ஆம் திகதி அன்று தான், தமிழருக்கு எதிரான - மிகவும் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை - அன்றைய அரசு பிரகடனப்படுத்தியது! - 1979 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி.

தனது விஞ்ஞான அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக- மனிதன் வேற்றுக் கிரகத்தில் காலடி எடுத்து வைத்தான். ஆனால், தனது பேரினவாதக் கொள்கையை விருத்தி செய்வதற்காக - இன்னொரு இனத்தின் பாரம்பரிய மண்ணில் காலடி எடுத்து வைத்து, அடக்கு முறையை மேற்கொள்வதற்காக- இலங்கை அரசு செய்த சாதனைதான் பயங்கரவாதச் தடைச் சட்டம். 25 ஆண்டுகளுக்கு முன்பு, இதே தினத்தில் அமுலாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழருக்கு மட்டுமே எதிராகச் செய்யப்பட்டது - என்று சொல்வதில் ஓர் உண்மை உண்டு. ஆமாம், எந்த ஒரு சிங்களக் குடிமகனுக்கு எதிராகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் போடப்படவில்லை, என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். ஜே.வி.பி சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டபோது கூட, அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை என்ற செய்தியையும் நாம் இந்த கருத்தில் கொள்ள வேண்டும்.



வேற்றுக் கிரகத்தில் மனித குலம் காலடி வைத்த திகதியில், இங்கே, இன்னுமொரு இனத்தின் பாரம்பரிய மண்ணில் அகலக்கால் பதிப்பதற்கு, சட்டங்களைக் கொணடு வந்தது ஒரு பேரினவாத அரசு. இன்று வரை அந்தப் பாரம்பரியத் தமிழ் மண்ணிலே, இராணுவ அடகு முறைகளைப் பிரயோகித்து, தமிழ் மக்களைத் தங்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கி வருத்தி வந்துள்ளன சிங்கள அரசுகள்.

மனிதன் தன்னை ஓர் உலக மனிதனாகக் காட்டும் பொருட்டு, 35 ஆண்டுகளுக்கு முன்னர், சந்திர மண்டலத்திற்குப் பயணம் செய்தான். ஆனால், இலங்கைத் தீவில்- இரண்டு தேசங்கள்- இரண்டு இனங்கள் இருப்பதனை, அதே தினத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கள அரசு- பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் மூலம் உறுதி செய்தது. தமக்கு ஒரு சட்டம்- தமிழனுக்கு ஒரு சட்டம் என்கின்ற ரீதியில் தான்தோன்றித் தனமாக நடந்த சிங்கள அரசுகள் நிருபித்தது, ஒரு தீவில் - இரு நாடுகள் என்ற விடயத்தைத்தான்.

யாழ்ப்பாணம்

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்

# 68 பொதுமக்கள் பலி! பலர் காயம்!!



பாக்தாத்தின் பகுபா நகரில் நேற்று இடம்பெற்ற காாக்குண்டுத் தாக்குதலில் குறைந்தது 68 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல், பகுபா நகரிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் இந்தத் தாக்குதலில் பல பொதுமக்கள் படுகாயமடைந்ததாகத் தெரிவித்தனர்.

ஈராக்கியப் படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நிலையமாக இந்தப் பொலிஸ் நிலையம் இருந்துவருவதனாலேயே இதன்மீது தாக்குதல் நடத்தப்பட்டுவருகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஈராக்கிய அப்பாவிப் பொதுமக்கள் எனவும், அமெரிக்கர் ஒருவரும் இல்லையெனவும் அங்குநின்ற ஈராக்கியர் ஒருவர் மிகவும் ஆத்திரமடைந்த நிலையில் சத்தமிட்டார்.

இதேவேளை பாக்தாத்தின் சுவாரியா நகரில் இடம்பெற்ற மோதலில் 35 கிளர்ச்சிவாதிகளும், 7 ஈராக்கியப் படையினரும் கொல்லப்பட்டதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளின் தளபதி லெப்.கேணல்.அறூா டொமான்ஸ்கி தெரிவித்தார்.

அத்துடன் மேலும் பத்து ஈராக்கியப் படையினரும் காயமடைந்தனர். இந்த நடவடிக்கையில் 40 கிளர்ச்சியாளர்களும் கைதுசெய்யப்பட்டனர்.



பாக்தாத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் அமெரிக்கப் படையினர் ரோந்து நடவடிக்கையில் சென்றவேளை வீதியோரமாக மறைத்துவைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஒரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

## வானொலி நிலையத்தில் நேற்று குண்டுவெடித்தது

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையருகே உள்ள தெற்கு வசிரிஸ்தான் தலைநகர் வானாவில் உள்ள வானொலி நிலையத்தில் 2 குண்டுகள் வெடித்தன. இதில் நிலையம் சேதமடைந்தது. இந்த வானொலி நிலையம் கடந்த வாரந்தான் தொடங்கப்பட்டது.

உள்ளூர் மொழியான புஷ்டோவில் இசை மற்றும் தகவல் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிவந்தன.

அல்கொய்டா தீவிரவாதிகள் தான் இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அடுத்த மாதம் 1 ஆம் திகதி முதல் ஆப்கான் அகதிகள் முகாமை மூடிவிட பாகிஸ்தான் முடிவுசெய்துள்ளது.

அல்கொய்டா தீவிரவாதிகளிடமிருந்து வேறுபடுத்துவதற்காக பாகிஸ்தான் இவ்வாறு தீர்மானித்துள்ளது. ஆயிரக்கணக்கான ஆப்கான் அகதிகள் வசிரிஸ்தானில் வசிப்பதால், அகதிகள் யார், தீவிரவாதிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்கமுடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பங்களாதேஷில் வெள்ளம்: நானூறுக்கு மேற்பட்டோர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெள்ளபெருக்கு ஏற்பட்டது. அந்த நாட்டின் 2/3 பங்கு நிலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தலைநகர் டாக்காவின் பல வீதிகளில் இடுப்பளவு தண்ணீர் ஓடுகிறது. அங்கு பிரதான போக்குவரத்துச் சாதனமான சைக்கிள் ரிக்ஷாவுக்குப் பதிலாக படகுகள் தான் ஓடுகின்றன.

தண்ணீரில் மூழ்கியும், நோய்க்குப் பலியாகியும், பாம்புகடித்தும் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 100 பேர் பலியாகினர். 3 வாரமாக தொடரும் வெள்ளத்துக்கு மொத்தம் 400 பேர் பலியாகினர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள பள்ளிக்கூடங்களிலும், உயரமான கட்டடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்ட 500 பேர் தலைநகர் டாக்காவில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பறவைகளைப் பிடித்து உண்ணும் சிலந்தி!



(சிட்னி)

அவுஸ்ரேலியா நாட்டில் காணப்படும் ஒருவித சிலந்திப்பூச்சி இது.

பாம்மைப்போல கொடிய விசம் உள்ளது இந்தச் சிலந்தி. இந்த ராட்சத சிலந்தி பறவைகளைக்கூடப் பிடித்துத தின்றுவிடும்.

இந்தச் சிலந்திப்பூச்சி 25 செ.மீ முதல் 30 செ.மீ வரை நீளம் இருக்கிறது. விஷ கொடுக்குகள் 2 செ.மீ நீளம இருக்கிறது.

கோலியாத் சிலந்தி என்று இதற்குப் பெயரிட்டு இருக்கிறார்கள். மனிதர்களைக் கடித்தால் மரணம் கூட ஏற்பட வாய்ப்பு உள்ளதாம்.

# காஷ்மீரில் நடந்த தாக்குதலில் 4 படையினர் உட்பட 7 பேர் பலி!



(புதுடெல்கி)

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் இடம்பெற்ற தாக்குதலில் 5 படையினரும், 2 கிளர்ச்சிவாத சந்தேக நபர்களும் கொல்லப்பட்டதாக காஷ்மீர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் உல்லாசப் பயணிகள் அதிகமாகக்கூடும் சிறிநகரின் டால் ஏரிப்பகுதியில் இடம் பெற்றது.

டால் ஏரிப் பகுதியில் ஹோட்டல்களுடன் இணைந்ததாக அமைந்துள்ள பரா துருப்பினரின் முகாம்மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தியதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 6 பொலிஸார் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலைத் தாமே நடத்தியதாக மன்சூரியன் என்ற இஸ்லாமிய அமைப்பு உரிமைகோரியுள்ளது.

தற்போது படையினர் ஹோட்டலைச் சூழவுள்ள பகுதிகளில் கிளர்ச்சிவாதிகள் தங்கியுள்ளனரா என்பதைக் கண்டறிய அப்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் - ஏ.எப்பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடந்தவேளையில் பெருமளவு உல்லாசப் பயணிகள் இந்தக் ஹோட்டல்களில் தங்கியிருந்ததாகவும், அவர்கள் அனைவரும் பாதுகாப்பான முறையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை அடுத்து டால் ஏரியில் இருந்த பெருமளவு உல்லாசப் பயணிகள் அங்கிருந்து வெளியேறிவருவதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# சிலி தூதரகத்தில் நடந்த சம்பவத்தில் பொலிஸார் உட்பட நால்வர் உயிரிழப்பு



மத்திய அமெரிக்காவிலுள்ள கோஸ்ராரிக்கா நாட்டில் அமைந்துள்ள சிலி தூதரகத்தில் பொலிஸார் ஒருவர் சிலரைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த வேளை இடம்பெற்ற சம்பவத்தில் பணயக்கைதிகள் மூவரும் அந்தப் பொலிஸாருமாக நால்வர் கொல்லபபட்டனர்.

ஏழுமணி நேரமாக இந்தப் பணய நாடகம் இடம்பெற்றது. அதன் பின் கோஸ்ராரிக்காப் பொலிஸார் தூதரகத்திற்குள் சென்றவேளை பொலிஸாரும், மூன்று பணயககைதிகளும் உயிரிழந்து காணப்பட்டனர்.

ஏனைய ஆறு பணயக்கைதிகள் தமது பாதுகாப்பிற்காக அறைகளைத் தாமே பூட்டி வைத்துக்கொண்டு மறைந்திருந்தனர்.

குறித்த பொலிஸார் பல வருடங்களாக சிலி தூதரகத்தில் பாதுகாப்புப் பணியில் கடமையாற்றி வந்ததாகவும் - ஆனால், புதிதாக இவர் வேறிடத்திற்கு மாற்றப்பட இருந்தவேளை இவ்வாறு செய்திருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொலிஸ் தூதரகத்தில் பணயக்கைதிகளை பிடித்த உடனேயே கோஸ்ராரிக்கா பொலிஸார் தூதரகத்தைச் சுற்றிவர பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர்.

சிலி தூதரகத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றிய இந்தப் பொலிஸார் மிகவும் பொறுப்புணர்வுடன் கூடிய அதிகாரியெனவும், ஆனால் ஏன் இவர் இப்படிச் செய்தார் என்பது தமக்குத் தெரியாதிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் தவறு என்பது சகலரும் விடுவதுதான் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நடைபெறும் நேரத்தில் கோஸ்ராரிக்காவில் வாழும் சிலி நாட்டு மக்களை சிலியின் உள்துறை அமைச்சர் ஜோஷ் மிகுவல் இன்சல்சா சந்தித்து கலந்துரையாட இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் சிங்கப்பூரில் அதிகரித்துள்ளதாம்!

சிங்கப்பூரில் கொலையும், பாலியல் வல்லுறவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டைவட இந்த ஆண்டு, முதல் 6 மாதத்தில் பாலியல் குற்றங்கள் 20 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. மொத்தம் 16 ஆயிரத்து 545 குற்றங்கள் நடந்துள்ளன. கொள்ளை மற்றும் கடத்தல் சம்பவங்களும் இதில் அடங்கும்.

6 மாதத்தில் 70 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த 70 சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்ட 63 பேர் பெண்களின் உறவினர்கள்தானாம். தந்தை, சகோதரன், நண்பர்கள் ஆகியோரும் இதில் அடங்கும்.

உலக நோக்கு

## வைத்தியசாலை கட்டடம் இடிந்து வீழ்ந்து 32 பேர் பலி

### ஆப்கானில் சம்பவம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஜாம்கூரியட் வைத்தியசாலைக் கட்டடம் இடிந்து விழுந்தது. இதில் 32 பேர் பலியானார்கள். 22 பேர் காயமடைந்தனர்.

பலியானவர்கள் அனைவரும் ஆப்கானிஸ்தானியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் நங்கார்கர் மாநிலத்தில் 2 இடங்களில் குண்டுவெடித்தது. இதில் ஒருவர் பலியானார். 3 பேர் காயமடைந்தனர்.

## எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் 8 மணிநேரத்தில் ஏறி சாதனை

இமயமலைமீது ஏறத்தொடங்கிய ஒரு இளைஞர் 8 மணி 10 நிமிடத்தில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை படைத்து இருக்கிறார்.

நேபாளத்தைச் சேர்ந்த 27 வயதுடைய பெம்பா டோர்ஜி இந்தச் சாதனையைப் படைத்திருக்கிறார்.

டோர்ஜி, மலை ஏறியபோது 64 மலை ஏறும் குழுக்கள் இமயமலையின் 2 பக்கங்களிலும் மலை ஏறின. சாதாரணமாக ஒரு மலை ஏறும் குழு 17 ஆயிரத்து 380 அடி உயரத்தில் உள்ள அடித்தள முகாமில் இருந்து 29 ஆயிரத்து 35 அடி உயரத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைய 3 நாட்கள் ஆகும்.

கடந்த ஆண்டு லக்பா ஜியேலு 10 மணி 56 நிமிடங்களில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை செய்தார்.

பெம்பாடோர்ஜியின் சாதனை உண்மையானதுதானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவருடன் மலை ஏறிய வெளிநாட்டு மலை ஏறும் குழுக்களை நேபாள அரசு கேட்டுள்ளது.

## 1000 குழந்தைகளின் உடல்கள் புதைப்பு!

இங்கிலாந்தின் லண்டன் நகரினருகே 1000 இற்கும் மேற்பட்ட குழந்தைகளின் உடல்களை ஒரே நேரத்தில் புதைக்கப்போகிறார்கள். லிவர்பூர் பகுதியில் உள்ள ஆல்டர் ஹே குழந்தைகள் ஆஸ்பத்திரியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இரசாயனக் கலவையில் வைக்கப்பட்டிருந்த குழந்தைகளின் உடல்கள் இவை.

பிரசவத்தின்போது இறந்த குழந்தைகள், நோயால் இறந்த குழந்தைகள், குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் உடல்கள் இவை. நீண்ட நாட்கள ஆகிவிட்டதால் இவற்றைப் புதைத்துவிட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் அழகிப் போட்டி



அமெரிக்காவில் 19 வயதுக்குட்டபட்டவர்களுக்கான அழகிப்போட்டி ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு 22 ஆவது மிஸ் ரீன் ஏஜ் அழகிப்போட்டி ஓகஸ்ட் 6 ஆம் திகதி கலிபோர்னியாவில் உள்ள பொமஸ்பிரிங் என்ற நகரில் நடைபெறவுள்ளது. 51 அழகிகள் இதில் கலந்து கொள்வர். கலிபோர்னியாவில் திரண்டுள்ள இந்த அழகிகளுக்கான பேஸ்போல் போட்டியும் நடத்தப்படும். இதில் அரிசோனா மாநில அழகி ஆலிகில் லேண்ட் பந்துவீசிய காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழீழ சட்ட நடைமுறைகளே தமிழ்மக்களுக்கு பயனுள்ளது!

(கிளிநொச்சி)

தமிழீழ சட்ட நடைமுறைகளே இலங்கை அரசின் சட்ட நடைமுறையிலும் பார்க்க தமிழீழ மக்களுக்கு பயனுடையதாக உள்ள என தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

மன்னார் - வட்டக்கண்டல் பகுதியில் நேற்று தமிழீழ நீதிமன்றத்தின் ஏழாவது நீதிமன்ற வளாகம் திறந்து வைக்கப்பட்டபோது, அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள தாயகப் பிரதேச மக்களின் நன்மை கருதி வட்டக்கண்டலில் தமிழீழ நீதிமன்ற வளாகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ நீதிமன்றம் தமிழ்மக்களின் தேவையறிந்து தொடர்ந்தும் உத்வேகத்துடன் செயற்படும். கடந்த [illegible] நீதிமன்றப் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது தமிழ்மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சரியான முறையில் கையாண்டுள்ள வகையில் தமிழீழ நீதிமன்றம் சிறப்பாக விளங்குகின்றது.

இலங்கை நீதிமன்றங்களின் சட்ட ஒழுங்கமைப்பிலும் பார்க்க தமிழீழ நீதிமன்ற சட்ட ஒழுங்கமைப்புகள் சிறப்பாக உள்ளன எனத் தெரிவித்தார்.

தலைமை நீதியாளர் ஒப்பிலான்

## நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா!

தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் தந்தை பேதுறு, திருமதி பொன் தியாகம் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர் மாதவன் ஏற்றிவைத்தார்.

மாவட்ட நீதிமன்றின் பெயர்ப்பலகையை மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

புதிய நீதிமன்றக் கட்டடத்தை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் திறந்துவைத்தார்.

நீதிமன்ற காரியாலய கட்டடத்தை அகமது லெப்பை ஆதம் பாவா திறந்துவைத்தார்.

# ராஜபக்ஷவை யாழ்....

யைச் சேர்ந்த பற்றிக்மேரி ரவி, நாவற்குழியைச் சேர்ந்த பொன்னையா ஜெயராஜா, அரியாலையைச் சேர்ந்த செல்லையா பரமநாதன், கைதடியைச் சேர்ந்த தம்பன் பாஸ்கரன், குருநகரைச் சேர்ந்த செல்லத்துரை குமார், கொழும்புத்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் சிவாஜினி, யாழ். மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த தேவதாஸ் சுரேஸ்குமார் ஆகியோரே காணாமற்போனவர்களாவர்.

மேற்படி பதின்நான்கு வழக்குகளில் ஆறு வழக்குகளின் எதிர் மனுதாரர்களில் ஒருவரான - கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவரும் முன்னர் அரியாலை இராணுவமுகாம் பொறுப்பதிகாரியாக இருந்தவருமான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

தான் சட்டத்தரணி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும், இதுவரை எந்தவொரு சட்டத்தரணியையும் நியமிக்கவில்லை என்பதால், இதற்குத் தனக்கு இரண்டு மாத கால தவணை தரும்படி மன்றிடம் கேட்டுக் கொண்டார்.

நேற்று நீதிபதி அவரது கோரிக்கையை நிராகரித்து, தனக்கென ஒரு சட்டத்தரணி ஒருவரை நியமித்துக் கொள்ளுமாறும் அவ்வாறு சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதில் சிரமம் ஏற்படுமாயின் தனது தேவையின் பொருட்டு சட்ட உதவிமன்றத்துடன் தொடர்புகொண்டு தனக்கு ஒரு சட்டத்தரணியை நியமித்துக் கொள்ளமுடியும் எனவும், இது தொடர்பாக குறித்த நிறுவனத்தின் இணைப்[illegible]ான சட்டத்தரணி அபிமன்னசிங்கம் உதவுவார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்மனுதாரரான கோப்ரல் ராஜபக்ஷவை ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிவரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறும் கட்டளையிடப்பட்டது.

அத்துடன், வழக்கு செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களால் ராஜபக்ஷவை யாழ்.சிறைச்சாலையில் வைத்திருக்க முடியாது என சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் தெரிவிக்கப்பட்டபோது; குறித்த சிறைச்சாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிக்கு நீதிபதி கட்டளையிட்டார்.

இதேவேளை மன்றில் ஆஜராக வந்த கோப்ரல் ராஜபக்ஷ - காணாமற்போன உறவினர்களுடன் கலந்துரையாடியபோது - தன்னை வழக்கில் எதிரியாகக் கணியாது, சாட்சிக்காரராக கணித்தால் கடந்தகாலத்தில் இடம்பெற்ற கைதுகள், காணாமற்போதல்கள் தொடர்பாகவும், காணாமற்போன சிலநபர்கள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது தொடர்பாகவும்; அவர்களில் சிலருக்கு நடந்தகதி குறித்தும் தகவல்களை வெளியிடுவதாகத் தெரிவித்தார் என அறியவருகிறது.

# ஐ.நா.மனித உரிமைகள்...

ஒழுங்கு நடைமுறை தொடர்பாக ஆசிய சட்டவள நிறுவனம் சமர்ப்பித்த விரிவான அறிக்கை, இலங்கை மீதான இன்றைய கடும் விமர்சனங்களுக்கு வழிசமைத்தது.

இவ்வறிக்கையானது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் பார்வையாளர்களாக பங்கேற்ற நாடுகளுக்கும் ஐ.நா பணிமனையால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

எனினும் இவ்வறிக்கையினை மனித உரிமைகள் உப ஆணைக்குழு தனது தற்போதைய விதிமுறைகளுக்குட்பட்டு தனித்துவமாகப் பரிசீலிப்பதை தவிர்த்து வருகின்றது.

இதனை விவாதிக்க விடாது தவிர்ப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை இலங்கை மேற்கொண்டதாக உப ஆணைக்குழுவில் பங்கேற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் கருதின. இதனால் நாடுகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற இரு சர்வதேச நிறுவனங்கள் இவ்விவகாரத்தை கையிலெடுத்தன.

இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய ஆசிய சட்டவள நிறுவனத்தின் ஐ.நாவிற்கான பிரதிநிதி இலங்கையின் சட்ட அமுலாக்கல் நிலவரத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் தொடர்பான அச்சத்தை வெளியிட்டார்.

அரசியல் அழுத்தம் மற்றும் பல காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களே தொடர்ந்தும் அடக்குமுறைக்குட்பட்டு பாதிக்கப்படும் ஆபத்தான சூழல் அங்கு எழுந்துள்ளதற்கான ஆதாரங்களை முன்வைத்தார்.

எனவே, உடனடியாக ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு இலங்கை நிலையை கருத்தில் எடுத்து இதனை ஆராய்வதற்கான வழிகளை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இவருக்கு முன்னர் பேசிய மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி வெரீனா கிராவ் இலங்கையின் சட்ட ஒழுங்கு நிலை படிப்படியாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, இராணுவ மயப்படுத்தப்பட்டு இன்று சீரழிந்து வருகின்றது எனக்குற்றஞ்சாட்டினார்.

செம்மணி உட்பட பல கோரமான விவகாரங்களை அவர் இதற்காகப் பட்டியலிட்டு மிகத் தாக்கமான உரையினை ஆற்றினார். பல உலக நாடுகளின் பிரதிநிதிகளும் சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களும் அவரது உரையினை கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். இது இலங்கைக்கு எதிரான கடும் விமர்சனமாக அமைந்திருந்தது.

ஆணைக்குழு முன் உரையாற்றிய இன்ரர் பேத் இன்ரர்நசனல் எனும் சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி கலாநிதி சால்ஸ் கிராவ், புலிகள் மிக வெளிப்படையான முறையில் இணக்கப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்கையில் ஜனாதிபதி அமைச்சர்களைத் தூக்கியெறிந்தும் நாடாளுமன்றத்தைக் கலைத்தும் இணக்கச் சூழலைக் குழப்புகின்றார் எனச் சுட்டிக்காட்டினார்.

சமாதானச் சூழல் நிலவிய போதும் எதுவித பொருண்மிய முன்னேற்றங்களும் அற்ற நிலையில் தமிழ் மக்கள் எவ்வளவு காலம் பொறுமையாக இருப்பார்கள் என்கின்ற கேள்வி பெரிதாக எழும்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாணைக் குழுவிடம் தமிழ் மக்களின் பொருண்மிய சமூக கலாசார உரிமைகள் தொடர்பான மனுவொன்றை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கையளிக்கவுள்ளது.

இம்மனுவானது இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார சமூக கலாசார உரிமைகளை இலங்கை தொடர்ந்தும் நிராகரிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

## உயிரிழந்தோரின் உடல்களை பொறுப்பேற்க உறவினர் மறுப்பு

கொட்டாவ பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கருணா குழுவைச சேர்ந்தவர்களில் ஆறுபேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட போதிலும்,

அந்தச் சடலங்களை பொறுப்பேற்க உறவினர்கள் மறுத்ததால் சடலங்களை அரச செலவில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## மன்மோகன் சிங்குடன்...

இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான உயர்மட்ட சந்திப்பொன்று எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்பட பல முக்கிய அரசியற் பிரமுகர்கள் தாய்லாந்து பயணமாகவுள்ளனர்.

வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளின் மாநாடு என்று அழைக்கப்படவுள்ள இந்தச் சந்திப்பின் போது இப் பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தக பொருளாதார பாதுகாப்பு மேம்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் இது குறித்து இந்த நாடுகள் புரிந்துணர்வுடன் இணைந்து [illegible]னியாற்றுவது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

இந்த சந்திப்பின் போது நேபாளம், பூட்டான் ஆகிய இரு நாடுகளும் இம் மாநாட்டுக் குழுவில் இணைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## வேப்பமரக்கிளை

# திடீரென முறிந்து வீழ்ந்து இரு நாட்களாக எரிகிறது

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் முன்பாக இருந்த வேப்பமரக்கிளை ஒன்று முறிந்துவீழந்து இரண்டு நாட்களாக தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் நண்பகல் புதுக்குடியிருப்பு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் முன்பாகவுள்ள வேப்பமரத்தின் கிளை ஒன்று திடீரென முறிந்து வீழ்ந்தது.

முறிந்து வீழ்ந்த கிளை தீப்பற்றியெரிய ஆரம்பித்ததாகவும், நேற்றும் தொடர்ந்து எரிந்துகொண்டிருந்ததாகவும் நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தைக் காண அப்பகுதிக்கு பெருமளவு மக்கள் சென்றுகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற் போனோரின் வழக்கில்

# இரு இராணுவ அதிகாரிகளை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக - இரு இராணுவ அதிகாரிகளை எதிர்வரும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் ஆஜராகும்படி யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

1997/98 காலப்பகுதியில் குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த மைக்கல் பேனாட் பெர்னாண்டோ என்ற இளைஞர் சார்பாக ஜோண்சன் பாரதி என்பவரும், கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பெர்னாண்டோ ஜெயகாந்தன் என்பவர் சார்பாக ஆசீர்வாதம் பெர்ணாண்டோ என்பவரும், பாசையூரைச் சேர்ந்த அந்தனி அலிஸ்ரன் என்பவர் சார்பாக ஜோவல் அலிஸ்ரன் ஆகியோரால் அக்காலப் பகுதியில் பாசையூர் இராணுவ முகாமில் கடமையாற்றிய லெப்ரினன் கேணல் கே.எ.டி.குணசேகரா, கப்டன் பண்டார அப்போதைய பலாலி இராணுவ முகாம் கட்டளை அதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மேல் நீதிமன்றினால் தற்பொழுது யாழ்.மாவட்ட நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்ட இவ் வழக்குகள் நேற்று யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தியும், எதிரணிகள் சார்பில் அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி ஆகியோர் ஆஜராகினர்.

எதிராளிகள் நீதிமன்றில் ஆஜராகாததை அடுத்து லெப்ரினன்ட் கேணல் குணசேகரா மற்றும் கப்டன் பண்டார ஆகியோர் பட்டலந்த இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றுவதால் அவர்களுக்கான அழைப்பாணையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஊடாக இராணுவ தலைமையக சட்டப்பிரிவு அதிகாரி மூலமும், பலாலி கட்டளை அதிகாரிக்கான அழைப்பாணையினை மல்லாகம் நீதிமன்றின் மூலமும் அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.